மே 2007

தமிழரசு

செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு



ஒளிர்ந்து நிறைந்த ஓராண்டு

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் அவர்களுடன்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர். மு. கருணாநிதி அவர்கள்
(5.6.2006 - புதுடெல்லி)

மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுடன்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர். மு. கருணாநிதி அவர்கள்
(5.6.2006 - புதுடெல்லி)

சட்டப்பேரவையில் கலைஞர் பொன்விழா



- ஒளிப்படத் தொகுப்பு

தமிழக சட்டப்பேரவையில் 11.05.2007 அன்று நடைபெற்ற
"சட்டப்பேரவையில் கலைஞர் பொன்விழா" நிகழ்ச்சியில் பங்கேற்ற
மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு
பொன்னாடை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்கள்.



தமிழக சட்டப்பேரவையில்
11.05.2007 அன்று நடைபெற்ற
"சட்டப்பேரவையில்
கலைஞர் பொன்விழா"
நிகழ்ச்சியில் பங்கேற்ற
மேதகு தமிழ்நாடு ஆளுநர்
திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள்,
விழாப் பேருரையாற்றினார்கள்.



தமிழக சட்டப்பேரவையில்
11.05.2007 அன்று நடைபெற்ற
"சட்டப்பேரவையில்
கலைஞர் பொன்விழா" நிகழ்ச்சியில்
பங்கேற்ற மேதகு தமிழ்நாடு ஆளுநர்
திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களுக்கு,
மாண்புமிகு அவை முன்னவரும்
நிதியமைச்சருமான
பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள்
பொன்னாடை அணிவித்து
நினைவுப் பரிசினை வழங்கினார்கள்.

தமிழக சட்டப்பேரவையில் 11.05.2007 அன்று நடைபெற்ற
"சட்டப்பேரவையில் கலைஞர் பொன்விழா" நிகழ்ச்சியில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்
ஏற்புரையாற்றினார்கள்.

தமிழக சட்டப்பேரவையில் 11.05.2007 அன்று நடைபெற்ற
"சட்டப்பேரவையில் கலைஞர் பொன்விழா" நிகழ்ச்சியில்
மேதகு தமிழ்நாடு ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு
பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசினை வழங்கினார்கள்.

தமிழக சட்டப்பேரவையில் நடைபெற்ற
“சட்டப்பேரவையில் கலைஞர் பொன்விழா ” நிகழ்ச்சியில்
மாண்புமிகு பாராளுமன்ற சபாநாயகர் திரு.சோம்நாத் சட்டர்ஜி அவர்கள்
பங்கேற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை வாழ்த்தி
பேருரையாற்றி பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசினை வழங்கினார்கள். (12.05.2007)

தமிழக சட்டப்பேரவையில் நடைபெற்ற
"சட்டப்பேரவையில் கலைஞர் பொன்விழா" நிகழ்ச்சியில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்புரையாற்றினார்கள்.
உடன் மாண்புமிகு பாராளுமன்ற சபாநாயகர் திரு. சோம்நாத் சட்டர்ஜி அவர்கள்
மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத்தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் ஆகியோர்
உள்ளார்கள். (12.05.2007)

நுழைவாயில்

ஓய்வறியா உழைப்பாளி, ஒப்பற்ற உயர்தலைவர், முத்தமிழறிஞர் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தன்னிகரற்ற தலைமையின் கீழ்,** கடந்த ஓராண்டில் தமிழக அரசு செய்திட்ட சாதனைக் குவியல்களை, செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழரசு இதழ் வழியே **ஒளிர்ந்து நிறைந்த ஓராண்டு** என்ற மலர்த் தொகுப்பினை வழங்கியுள்ளது.

தமிழரசு இதழைப் பல்லாண்டுகளாகப் படித்துவரும் வாசகர்களுக்கு இது ஒரு வாசம் மிகு வண்ணமலர் ஆகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அருங்கலை அறிஞர் அவர்களின் எண்ணத்தில் மலர்ந்த எண்ணில்லாத் திட்டங்களை ஒவ்வொரு துறையும் போட்டி போட்டுக் கொண்டு நிறைவேற்றியிருக்கின்றன. பல ஆண்டுகள் செய்து முடிக்க வேண்டிய அளவுக்குச் செறிவான பல மக்கள் நலத்திட்டங்களை ஒரே ஆண்டில் செய்துமுடித்து இந்தியாவிற்கே தமிழ்நாடு வழிகாட்டியிருக்கிறது.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்

என்ற திருவள்ளுவரின் வாக்குக்கு ஏற்ப மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு, திடமான செயல்பாட்டினை மேற்கொண்டு இந்தச் சாதனைச் சரித்திரத்தை நிகழ்த்திக் காட்டியிருக்கிறது.

ஓராண்டில் ஒளிவீசிடும் இந்த சாதனை முத்துக்களை மணியாகக் கோர்த்து வெற்றி மாலையாகச் சூட்டியுள்ளோம்.

சாதனை மணம் கமழும் இந்த நறுமலரை நுகர்ந்து பயன்பெற வேண்டுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பரிதி இளம்வழுதி
செய்தித்துறை அமைச்சர்

தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2038
சித்திரை - வைகாசி / மே 2007
மலர் : 38 இதழ் : 11

ஆசிரியர் குழு

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :
து.இராசேந்திரன், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்
மற்றும் செய்தித்துறை மற்றும்
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு (பொறுப்பு)

நிருவாக ஆசிரியர்
கே.ட்டி. புகழேந்தி
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்
மு. ஸ்ரீநாகேஷ்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
ந. இளங்கோ
எஸ்.கே. மூர்த்தி
எஸ்.பி.எழிலழகன்

உதவி ஆசிரியர்கள்
ஆ. ராஜா
க . இராஜராஜேஸ்வரி
ஐ. இந்திராணி
இரா. சுரேஷ்
வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்

நிருபர்கள்
கோ. சண்முகம்
மாய குமரேசன்

இதழ் உதவியாளர்கள்
தி.பெரியார் சாக்ரடீசு
ஜெ. ஜெயசிம்ஹன்

புகைப்படக்காரர்
வி.ராதாகிருஷ்ணன்

கணினி வடிவமைப்பு
பி.ஏ. லூயிஸ் பெரியநாயகம்
அ. மதன்

வடிவமைப்பில் உதவி :
ஆர். பாலாஜி,
ஒப்பந்த தொழில்நுட்ப கணினி இயக்குபவர்

உதவி : தமிழ் வளர்ச்சித் துறை

தொகுத்து வடிவமைத்தது
தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை,
சென்னை-600 002.

தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி,
பொருளாதார வளம், இன்பநிலை,
உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டுக்கு அழகு
எனக் கூறப்படுபவைகளாகும்.

- திருக்குறள் கலைஞர் உரையிலிருந்து.

1. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி
பொதுத்துறை, உள்துறை, தொழிற்சாலைகள், தகவல் தொழில்நுட்பம் — 1 - 15

2. மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன்
நிதி, திட்டம், தமிழ் வளர்ச்சித்துறை — 16 - 23

3. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஆற்காடு திரு. நா. வீராசாமி
மின்சாரம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் — 24 - 27

4. மாண்புமிகு ஊரக வளர்ச்சி (ம)
உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி — 28 - 41

5. மாண்புமிகு புள்ளியியல் துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி — 75
புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

6. மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.வீரபாண்டி எஸ். ஆறுமுகம்
வேளாண்மை — 42 - 46

7. மாண்புமிகு பொதுப்பணி (ம) சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன்
பொதுப்பணி மற்றும் சட்டம் — 47 - 50

8. மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர். க.பொன்முடி
உயர்கல்வி — 51 - 53

9. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு
போக்குவரத்து — 54 - 55

10. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்
திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர், அகதிகள், பதிவு — 56 - 57

11. மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. நா. பழனிசாமி
ஊரகத் தொழில் (குடிசை மற்றும் சிறுதொழில் உட்பட) — 58 - 59

12. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி
வருவாய் — 60 - 62

13. மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. என்.சுரேஷ்ராஜன்
சுற்றுலா — 63 - 68

14. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி
செய்தி மற்றும் விளம்பரம் மற்றும் சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமம் 69 - 74

15. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு
உணவு மற்றும் கூட்டுறவு 75 - 77

16. மாண்புமிகு வீட்டுவசதி (ம) குடிசை மாற்று வாரியத்துறை அமைச்சர் திரு. சுப.தங்கவேலன்
வீட்டுவசதி மற்றும் குடிசைமாற்று வாரியம் 78 - 79

17. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்
மக்கள் நல்வாழ்வு 80 - 81

18. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன்
தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்பு 82 - 84

19. மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன்
இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் 85

20. மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. என்கேகேபி. ராஜா
கைத்தறி மற்றும் துணிநூல் 86 - 87

21. மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு
பள்ளிக் கல்வி மற்றும் தொல்லியல் 88 - 89

22. மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு. எஸ்.என்.எம். உபயதுல்லா
வணிகவரி 90 - 91

23. மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான்
சுற்றுச்சூழல், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு 92 - 95

24. மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என். செல்வராஜ்
வனம் 96 - 98

25. மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோவில் மு.பெ.சாமிநாதன்
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் 99 - 100

26. மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் டாக்டர் (திருமதி). பூங்கோதை
சமூக நலம் மற்றும் சத்துணவு 101 - 102

27. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன்
கால்நடை பராமரிப்பு 103

28. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ.தமிழரசி
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் 104 - 105

29. மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. கே.பி.பி.சாமி
மீன்வளம் 106

30. மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. உ.மதிவாணன்
பால்வளம் 107 - 108

31. மாண்புமிகு கதர்வாரியத்துறை அமைச்சர் திரு. கா. இராமச்சந்திரன்
கதர், கிராமத்தொழில்கள் 109



மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி
அவர்கள்

உள்துறை

★ குற்றம் எங்கு நடந்தாலும் மாநிலத்தில் எந்தக் காவல் நிலையத்திலும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

★ ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி திரு.பூர்ணலிங்கம் அவர்கள் தலைமையில் மூன்றாவது காவல் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு காவல்துறையை நவீனப்படுத்த ரூ.68 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ சென்னை மாநகரக் காவல் ஆணையர் அலுவலகம் வேப்பேரியில் ரூ.20.65 கோடி செலவில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

★ சென்னையில் காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் புதிய இணைப்புக் கட்டடம் கட்ட ரூ.20.31 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றங்கள்

★ சென்னை உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் தமிழ் மொழியை வழக்கு மொழியாகப் பயன்படுத்தவேண்டும் எனத் தீர்மானம் சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

★ சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளைக்கு முதற்கட்டமாக 200க்கும் அதிகமான பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

★ சென்னை உயர் நீதிமன்றத்திற்குக் கூடுதலாக 96 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

★ சென்னை உயர் நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள தமிழ்நாடு விரைவுப் போக்குவரத்திற்குச் சொந்தமான நிலத்தை,

சென்னை உயர் நீதிமன்றத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் அரசு வழக்கறிஞர்களின் பயன்பாட்டிற்கென ரூ.2.03 கோடி செலவில் தனியாக கட்டடம் கட்டுவதற்கும் ஆணையிடப்பட்டுள்ளது.

சிறைகள்

- ★ ரூ.77.09 கோடி செலவில் சுமார் 211.92 ஏக்கர் நிலப்பரப்பில் 3,000 ஆண் மற்றும் பெண் கைதிகளை அனுமதிக்கும் வகையில் தெற்காசியாவிலேயே மிகப்பெரிய அளவிலான அதிநவீன வசதிகளுடன் கூடிய புதிய சிறை வளாகம் புழலில் கட்டப்பட்டுள்ளது.
- ★ ஆண்டொன்றுக்கு ரூ. 39.74 இலட்சம் செலவில் காவல்துறைக் காவலர்களுக்கு இணையாக சிறைத்துறை காவலர்களுக்கும் மிகைநேரப் பணி ஊதியத்தை நாளொன்றுக்கு ரூ.100லிருந்து 150ஆக அரசு உயர்த்தியுள்ளது.
- ★ ஆண்டொன்றுக்கு ரூ.10.99 இலட்சம் செலவில் கிளைச் சிறைகளில் பணியாற்றும் சிறைக் காவலர்களுக்குச் சலவைப்படியை மாதம் ஒன்றுக்கு ரூ.30லிருந்து ரூ.100ஆக அரசு உயர்த்தியுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

- ★ 597 தீயணைப்போர், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தடய அறிவியல் துறை

- ★ 60,251 வழக்குகளில் 1,96,151 மாதிரி சோதனைகள் செய்யப்பட்டுள்ளன.
- ★ கணினி தடயப் பிரிவு, ஒலி தடயப் பிரிவு மற்றும் தடய உளவியல் பிரிவு நிறுவிட ரூ.223.27 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகரக் காவல்துறைக்கு ஹூண்டாய் கார் நிறுவனம் வழங்கிய 100 கார்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து இயக்கி வைத்தார்கள் (24.10.2006)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட புழல் மத்திய சிறைச்சாலை (26.11.2006)

களவு போன மற்றும் குற்ற வழக்குகளில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் உரியவர்களிடம் ஒப்படைப்பு (10.4.2007)

தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி உயர்வு



மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர்
மு.கருணாநிதி அவர்கள்

தகவல் தொழில்நுட்பவியல் துறை

✶ 2005–2006 ஆண்டுவரை ரூ.14,115 கோடியாக இருந்த தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி 2006 –07இல் ரூ.20,700 கோடியைத் தாண்டியுள்ளது. 2005–2006இல் 32 சதவிகிதமாக இருந்த வளர்ச்சி விகிதம் 2006–2007இல் 46 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

✶ இந்தியாவின் தலைசிறந்த இன்போஸிஸ் நிறுவனம் மஹிந்திரா வேர்ல்டு சிட்டியில் 130 ஏக்கர் பரப்பளவிலும், டாடா கன்ஸல்டன்சி சர்வீஸஸ் நிறுவனம் சிறுசேரியில் 70 ஏக்கர் பரப்பளவிலும் ஒரு பெரிய தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைத்துவருகிறது. இதேபோல் விப்ரோ நிறுவனம் சோழிங்கநல்லூரில் 80 ஏக்கர் பரப்பளவிலும் மஹிந்திரா வேர்ல்டு சிட்டியில் 90 ஏக்கர் பரப்பளவிலும் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைத்து வருகின்றன. எச்.சி.எல் நிறுவனம் சோழிங்கநல்லூரில் 50 ஏக்கர், சத்யம் நிறுவனம் சோழிங்கநல்லூரில் 50 ஏக்கர் மற்றும் காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் நிறுவனம் சிறுசேரியில் 25 ஏக்கர் பரப்பளவில் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைத்து வருகின்றன.

✶ சோழிங்கநல்லூரில் எல்காட் நிறுவனத்தால் ஏற்படுத்தப்படும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் வேகமாக உருப்பெற்று வருகிறது. இவ்வளாகத்தில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேலான வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் :

✶ வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடுகளுக்கு, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் ஒரு

தன்னிகரில்லாத் திட்டம் 15.9.2006 அன்று தொடங்கப் பட்டுள்ளது. முதற்கட்டமாக 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் தேசிய ஒப்பந்தப்புள்ளி முறையிலும், இரண்டாவது கட்டமாக 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வெளிப்படையான சர்வதேச ஒப்பந்தப்புள்ளி முறையிலும் கொள்முதல் செய்யப்பட்டன. வெளிப்படையாகவும், நியாயமாகவும் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பற்ற கொள்முதல் முறை அனைத்துத் தரப்பிலிருந்தும் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

✶ ரூபாய் 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான இரண்டாவது கட்ட விநியோகம் 15.2.2007 அன்று திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பம்மதுகுளம் கிராமத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. 31.3.2007 அன்றுள்ளவாறு மொத்தம் சுமார் 4,06,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2007ஆம் வருட முடிவிற்குள் ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதியிலும் சுமார் 10,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்தும் வகையில் 2007–2008 நிதியாண்டுக்கு ரூபாய் 750 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

✶ **தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN):** தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) தமிழக அரசும், இந்திய அரசும் இணைந்து அமைத்துள்ள ஒன்றாகும். இத்திட்டம் 2007 ஜூன் மாதம் நடைமுறைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நவீனவசதியைப் பெற்றுள்ள இந்தியாவின் மிகச் சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

✶ **தேசிய மின் ஆளுமைத் திட்டம் (NeGP) :** தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 15 திட்டங்கள் (Mission Mode Projects) தெரிவு செய்யப்பட்டுள்ளன. எல்லா திட்டங்களுக்கும் விரிவான வரைவு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு நிதி ஒப்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

✶ **மாநிலத் தகவல் விவரத் தொகுப்பு மையம் :** மைய அரசின் உதவியுடன் சென்னையில் மாதிரி மாநில தகவல் விவரத் தொகுப்பு மையம் ஒன்று அமைக்க திட்டமிடப்பட்டு வருகிறது. இந்தியாவில் இதுபோன்ற வசதியைக் கொண்ட மிகச் சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.

* **மின் ஆளுமைத் திட்டங்கள்:**

    * தமிழ்நாட்டில் வட்டாட்சியர் அலுவலகங்களின் கணினி வழி மின் ஆளுமைச் சேவைகளை மேம்படுத்துதல்.
    * தமிழ்நாட்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களின் கணினி வழி மின் ஆளுமைச் சேவைகளை மேம்படுத்துதல்.
    * தமிழ்நாட்டில் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் அலுவலகங்களின் கணினி வழி மின் ஆளுமைச் சேவைகளை மேம்படுத்துதல்.
    * தமிழ்நாட்டில் குடிமைப் பொருள் வழங்கு துறையின் அலுவலகங்களின் கணினி வழி மின் ஆளுமைச் சேவைகளை மேம்படுத்துதல்.
    * தமிழ்நாட்டில் போக்குவரத்துத் துறையின் அலுவலகங்களின் கணினி வழி மின் ஆளுமைச் சேவைகளை மேம்படுத்துதல்.
    * மாநிலப் போக்குவரத்துக் கழகங்களில் கணினி வழி முன்பதிவு முறையை மேம்படுத்துதல்.
    * தமிழ்நாட்டில் பதிவுத் துறையின் அலுவலகங்களின் கணினி வழி மின் ஆளுமைச் சேவைகளை மேம்படுத்துதல்.

இந்த இரு திட்டங்களுக்கும், மத்திய அரசு ரூ.75 கோடி அனுமதி அளித்துள்ளது.

* **பொதுச் சேவை மையங்கள் :** கிராமப்புற மக்களுக்கு வலிமை சேர்க்கவும், நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களிடையே உள்ள மின்னணுவியல் இடைவெளியைச் சரிசெய்யவும், மைய அரசின் உதவியுடன் பொதுச் சேவை மையங்கள் மூலமாக ஊரக சேவைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசும் தனியாரும் பங்கேற்று நடத்தும் வகையில் 5,440 பொதுச் சேவை மையங்கள் வரும் ஆண்டில் அமைக்கப்படும்.

* **தமிழ் இணையப் பல்கலைக்கழகம் :** உலகந்தழுவி வாழும் தமிழர்களும், தமிழ் ஆர்வலர்களும் தமிழ்மொழியைக் கற்கவும், இலக்கியம், பண்பாடு, கலை, வரலாறு ஆகியவற்றை அறிந்து கொள்ளவும், விரும்புவோருக்கு இணையதளம் வாயிலாக கல்வி வளத்தையும், வாய்ப்பினையும் அளிக்க தமிழக அரசு தமிழ் இணையப் பல்கலைக்கழகம் எனும் அமைப்பை நிறுவியது. பல்வேறு

நாடுகளில் நிறுவப்பட்டுள்ள தமிழ்க் கல்வி மையங்களின் வழியாகத் தமிழில் சான்றிதழ் மற்றும் இளநிலைப் பட்டப்படிப்புக்கான தேர்வுகளையும் இணையப் பல்கலைக்கழகம் நடத்தி வருகிறது. அடிப்படை, இடைநிலை, மேல்நிலை என்ற 3 படிநிலைகளில் அமைந்த சான்றிதழ்க் கல்வியையும், தமிழ் இளநிலைப் பட்டப் படிப்பையும், தமிழ் இணையப் பல்கலைக்கழகம் வழங்குகிறது. 56 நாடுகளைச் சேர்ந்த 5,527 மாணவர்கள் பல்வேறு பாடத் திட்டங்களுக்குப் பதிவு செய்துள்ளனர். 2,598 மாணவர்கள் சான்றிதழ்ப் படிப்பிற்கும், 2,929 மாணவர்கள் தமிழ் இளநிலைப் பட்டப்படிப்பிற்கும் பதிவு செய்துள்ளனர். 2006ஆம் ஆண்டில், 211 மாணவர்கள் சான்றிதழ்ப் படிப்பிலும், 131 மாணவர்கள் பட்டயத் தேர்விலும், 28 மாணவர்கள் மேற்பட்டயத்திலும் தேர்வு எழுதி வெற்றி பெற்றுள்ளனர். 2006–2007 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதன் முறையாக, மொத்தம் 247 இளங்கலை பட்டப்படிப்பு மாணவர்களுக்கு, இணையம் வழியாக 62 தேர்வுகள் நடத்தப்பட்டன. இந்த ஆண்டு, 40 பட்டய மாணவர்களுக்கும், 48 மேற்பட்டய மாணவர்களுக்கும் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரையில், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தை ஏறத்தாழ 15 இலட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்
பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று,
இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தைத்
தொடங்கிவைத்தார்கள் (15.9.2006)



மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர்
மு.கருணாநிதி அவர்கள்

தொழில்துறை

பல்லாயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கம்

- ✶ மோட்டோரோலா நிறுவனமும் தமிழக அரசும் இணைந்து 7.6.06ஆம் நாளன்று ஒப்பந்த குறிப்பாணை உடன்பாட்டில் கையெழுத்திட்டு, அதன்படி சுமார் 135 கோடி ரூபாய் செலவில் சிப்காட் திருப்பெரும்புதூர் தொழிற்பூங்காவில் 70 ஏக்கரில் தனது மின்னணுவியல் கடினபொருள் உற்பத்தி செய்யும் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது.

- ✶ இங்கிலாந்தைச் சார்ந்த கெபாரோ குழுமத்தின் துணை நிறுவனமான கெபாரோ இன்ஜினியரிங் இந்தியா (பி) லிமிடெட், சென்னைக்கு அருகில் உள்ள சிப்காட் திருப்பெரும்புதூர் தொழிற்பூங்காவில் 125 ஏக்கர் நிலப்பரப்பில் உந்தூர்தி உறுப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலையை சுமார் 300 கோடி ரூபாய் முதலீட்டில் உற்பத்தி செய்யும் திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது. இத்திட்டம் தொடர்பில் தமிழக அரசு மற்றும் கெபாரோ இன்ஜினியரிங் இந்தியா (பி) லிமிடெட் நிறுவனம் ஆகியவற்றிற்கிடையே 8.3.2007 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் – உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

- ✶ உருளிப்பட்டை உற்பத்தி செய்யும் தொழிலில் முன்னணியில் உள்ள அப்போலோ டயர்ஸ் நிறுவனம் சுற்றெல்லையல் மற்றும் பார ஊர்திக்குத் தேவையான உருளைப் பட்டைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலையை சுமார் ரூ.300 கோடியை ஆரம்ப கட்டத்தில் முதலீடு செய்யும் (ஆகமொத்தம் ரூபாய் 520 கோடியை அடுத்த ஐந்து ஆண்டுகளில்) திட்டத்தை சிப்காட் ஒரகடம் வளர்ச்சி மையம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுமார் 135 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்க உள்ளது. இத்திட்டம் தொடர்பில் தமிழக அரசு மற்றும் அப்போலோ டயர்ஸ் நிறுவனம் ஆகியவற்றிற்கிடையே 7.8.2006 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் – உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

* டேப் செமிகண்டக்டர் இந்தியா நிறுவனம், சென்னைக்கு அருகில் உள்ள சிப்காட் திருப்பெரும்புதூர் தொழிற்பூங்காவில் சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் செமிகண்டக்டர் மற்றும் சிப்பம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை ரூபாய் 1,000 கோடி முதலீட்டில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தவுள்ளது. இத்திட்டத்திற்குத் தமிழக அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் 18.8.06 நாளன்று டேப் செமிகண்டக்டர் இந்தியா நிறுவனத்துடன் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

* திருப்பெரும்புதூரில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் 280 கோடி ரூபாய் செலவில் கம்ப்யூட்டர் உதிரிபாக தொழிற்சாலை அமைப்பதற்காக அமெரிக்காவைச் சேர்ந்த டெல் நிறுவனத்துடன் தமிழக அரசு 15.9.2006 நாளன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது. டெல் கம்ப்யூட்டர் நிறுவனம் கணினி மற்றும் கணினி சார்ந்த பொருட்களை விற்பனை செய்வதில் உலகிலேயே முதலிடத்தில் இருக்கும் நிறுவனம். இந்நிறுவனம், திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்காவில் உள்ள உயர் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் 280 கோடி ரூபாய் மூலதனத்தில் செயல்படுத்த உத்தேசித்துள்ளது. இத்திட்டம், 1,100 பேருக்கு வேலைவாய்ப்பையும் 4,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

* தமிழகத்தில் செய்யாறு பகுதியில் சிப்காட் தொழிற்பூங்காவில் சுமார் 275 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 300 கோடி முதலீட்டில் காலணிகள் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைக்கவும், அங்கு காலணிகள் தயாரிப்புத் தொழிற்சாலை அமைப்பதற்காகத் தைவான் நாட்டை சேர்ந்த 'பெங்க்டே' நிறுவனத்துடன் தமிழக அரசு 19.9.2006 நாளன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது. குரோத் லிங்க் என்ற நிறுவனம், தைவான் நாட்டைச் சேர்ந்த "பெங்க்டே எண்டர்பிரைசஸ்" என்ற ஷூ தயாரிப்பு முன்னணி நிறுவனத்தின் துணை நிறுவனம் ஆகும். 'பெங்க்டே' நிறுவனம் விளையாட்டு வீரர்களுக்கான ஷூக்கள், ஸ்கேட்டிங் ஷூக்கள், சாதாரண ஷூக்கள் போன்ற காலணிகள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதோடு, புகழ்பெற்ற உலக பிராண்ட் ஷூ வகைகளையும் தயாரித்து வருகிறது. இந்தக் காலணிகள் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஏற்றுமதி சந்தையைப் பிரதானமாகக் கொண்டதாகும். இத்திட்டத்தைக் குரோத் லிங்க் நிறுவனம் மற்றும் அதன் குரூப் நிறுவனங்கள் சேர்ந்து 275 ஏக்கர் நிலப்பரப்பில் 300 கோடி ரூபாய் மூலதனத்தில் செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

இத்திட்டத்தின் முதல் கட்டமாக, 5,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கின்றனர். இறுதியாக இத்திட்டத்தின் அனைத்து விரிவாக்கப் பணிகளும் நிறைவுற்ற நிலையில் 15 ஆயிரம் பேர் இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் பணியமர்த்தப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

✶ சென்னையை அடுத்த திருப்பெரும்புதூரில் “சாம்சங் இந்தியா எலக்ட்ரானிக்ஸ்” நிறுவனம் 73 ஏக்கர் நிலப்பரப்பில் 450 கோடி ரூபாய் முதலீட்டில் தனது உற்பத்தியைத் தொடங்க தமிழக அரசுடன் 10.11.2006 நாளன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது. இதில், 50 ஏக்கர் நிலப்பரப்பில் உள்நாட்டுத் தேவைக்கான உற்பத்திப் பிரிவும், (Domestic Tariff Area) மற்றும் 30 ஏக்கரில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் உற்பத்திப் பிரிவும் (சிப்காட் உயர் தொழில்நுட்பப் பொருளாதார மண்டலத்தின் மூலம்) செயல்படும். மேலும் 40 ஏக்கரில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் மூலம் இத்தொழிற்சாலை தொடர்புடைய உதிரிபாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்குப் பயன்படுத்தப்படும்.

✶ இந்தியாவில் வேகமாக வளர்ந்துவரும் எலக்ட்ரானிக் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் 450 கோடி ரூபாய் (100 மில்லியன் அமெரிக்க டாலர்) முதலீட்டில் இத்தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளது. சாம்சங் நிறுவனத்தின் உற்பத்திப் பிரிவு உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டாவில் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. சென்னையில் அமையவுள்ள மையம் இரண்டாவது உற்பத்தி மையமாகும். முதற்கட்டப் பணி வடிவமைப்பில் கலர் டி.வி, கலர் மானிட்டர், ப்ரிட்ஜ், ஏ.சி., வாஷிங் மிஷின், பிரிண்டர்ஸ் மற்றும் தொழில்நுட்ப சாதனங்கள் தயாரிக்கப்படுவதுடன், இத்தொழிற்சாலை மூலம் 2,500 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

✶ **தேசிய தானியங்கி சோதனை மற்றும்**
ஆராய்ச்சி வளர்ச்சி அடிப்படை கட்டமைப்பு வசதித் திட்டம்

மத்திய அரசு, சென்னைக்கு அருகே, ஒரகடம் தொழிற்பூங்காவில் தென்னிந்திய தானியங்கி சோதனை மற்றும் ஆராய்ச்சி மையத்தை ஏற்படுத்தி வருகிறது. இம்மையம், தேசிய தானியங்கி சோதனை மற்றும் ஆராய்ச்சி வளர்ச்சி அடிப்படை கட்டமைப்பு வசதித் திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும். ரூ.400 கோடி மதிப்பீட்டுச் செலவில் இம்மையம் ஏற்படுத்தப்படவிருக்கிறது. சிப்காட் நிறுவனம் இத்திட்டத்திற்கு ஒரகடம் தொழில்பூங்காவில் 304 ஏக்கர் நிலத்தை ஒதுக்கியுள்ளது. மாண்புமிகு இந்தியப்பிரதமர் அவர்கள், 2006 நவம்பரில் தேசிய தானியங்கி சோதனை மற்றும் ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இத்திட்டம், அனைத்து வசதிகளையும் கொண்ட உலகத்தரம் வாய்ந்த தானியங்கி சோதனை,

செயல்திறன், ஆராய்ச்சி–வளர்ச்சி, உறுதி செய்யப்பட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதி மற்றும் சேவைகளைத் தென்னிந்திய தானியங்கி மையத்தில் ஏற்படுத்திக் கொடுக்கும். இத்திட்டத்தைச் செயற்படுத்தும் தொடக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்

✶ 2,12,044 மெ.டன் அச்சு எழுது காகிதம் உற்பத்தி செய்யப்பட்டு 10 சதவிகித உற்பத்தித்திறன் எய்தப்பட்டது.

✶ இதன் பயனாக இந்நிறுவனம் 2006 – 07 ஆம் நிதியாண்டில் அதிகபட்ச உற்பத்தியான 2,31,161 மெ.டன் அளவை எட்டியது.

✶ ரூ. 181 கோடி மதிப்புள்ள 52,333 மெ.டன் அச்சு எழுது காகிதம் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதனால் 2006–07ஆம் நிதியாண்டில் நிறுவனம் அதிகபட்ச ஏற்றுமதியான 52,712 மெ.டன் அளவை எட்டியது.

✶ இயற்கை எரிவாயு தயாரிக்கும் பிரிவில் இருந்து 47 இலட்சம் கன அடி மீத்தேன் வாயு உற்பத்தி செய்யப்பட்டு ரூ.5.85 கோடி மதிப்புள்ள, 2,821 கி. லிட்டர் உலை எண்ணெயின் உபயோகம் தவிர்க்கப்பட்டது.

✶ தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் காற்றாலைப் பண்ணையின் திறனை தொடர்ந்து உயர்த்தி வருகிறது. 31.3.2006 அன்று காற்றுப் பண்ணையின் மொத்தத் திறன் 28 மெ.வாட்டாக இருந்தது. இந்நிறுவனம், 2006–07ஆம் ஆண்டில் 1,250 கி. வாட் திறன் கொண்ட 6 காற்றாலைகளை மார்ச் 2007இல் ரூ.40 கோடி மூலதனச் செலவில் நிறுவியது. இதனால் 31.3.2007 அன்று காற்றுப்பண்ணையின் மொத்தத் திறன் 35.5 மெ. வாட்டாக உயர்ந்தது. இதில் உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதும் மாநில மின் தொகுப்பிற்கு வழங்கப்பட்டு வருகிறது.

✶ 1,421.55 இலட்சம் அலகு மின்சாரம், காற்றாலை பண்ணையிலிருந்தும் ஆலையின் மின் உற்பத்தியில் இருந்தும் மாநில மின் தொகுப்பிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இதன் மதிப்பு ரூ38.50 கோடி ஆகும்.

✶ 2006–07ஆம் நிதியாண்டில் 9,678 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாய பண்ணைத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதனால் 2,120 விவசாயிகள் பயன்பெறுவர்.

✶ நிறுவனப் பண்ணைத் திட்டம் 2004–05 மற்றும் 2005–06ஆம் நிதியாண்டுகளில் 1,373 ஏக்கர் நிலப்பரப்பில் செயற்படுத்தப்பட்டது. 2006–07ஆம் நிதியாண்டில் மேலும் 335 ஏக்கர் நிலப்பரப்பில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

* அரியலூர் சிமெண்ட் நிறுவனம் கடந்த ஆண்டு ஈட்டிய ரூ.363.82 இலட்சம் நிகர இலாபத்தைவிட 2006 – 07 ஆண்டு, ரூ. 1,294 இலட்சம் நிகர இலாபமாக ஈட்டியுள்ளது.

* கடந்த ஆண்டு இதே காலத்தில் ரூ.331.41 இலட்சம் நஷ்டம் அடைந்த நிலையில் இந்த ஆண்டு தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் ரூ.484 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

* தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மே 2006 மற்றும் மார்ச் 2007க்கு உட்பட்ட கால அளவில், தொழிற்சாலைகளுக்குக் கடன் வழங்குவதற்காக மொத்தமாக ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.454.79 கோடியில் (ஏறத்தாழ) ரூ.318.88 கோடி வழங்கியுள்ளது. இதன் பயனாக 12,795 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடனுக்கான வட்டியினைக் காலந்தவறாமல் செலுத்தும் தொழிற்சாலைகளுக்கு, ஒப்பளிக்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ.0.69 கோடியில், ரூ.0.45 கோடியை வட்டி மானியமாக அரசு விடுவித்துள்ளது. (Back ended interest subsidy) மேற்சொன்ன தொகை முதலீட்டுக் கழகத்தால் கடனுதவி வழங்கப்பட்ட தகுதியுள்ள 489 தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சர்க்கரை

* சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் ஆல்கஹால் உற்பத்தி 111.17 இலட்சம் லிட்டர்களாகும். இந்த ஆலை தொடங்கியதிலிருந்து இதுவே மிக அதிகமானதாகும். இவ்வாலை ரூ.946.16 இலட்சம் இலாபம் ஈட்டி சாதனை படைத்துள்ளது.

* கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஆல்கஹால் உற்பத்தி 110.31 இலட்சம் லிட்டர்களாகும். இந்த ஆலை தொடங்கியதிலிருந்து இதுவே மிக அதிகமானதாகும். இவ்வாலை 499.04 இலட்சம் இலாபம் ஈட்டி சாதனை படைத்துள்ளது.

தமிழ்நாடு கனிம நிறுவனம்

* அம்பத்தூரிலுள்ள தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் (TAMIN) வெர்மிகுலைட் விரிவாக்கப் பிரிவு ரூ.59.72 இலட்சம் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது. இத்தொழிற்சாலையில் சென்ற வருட விற்பனை மே 2005 முதல், மார்ச் 2006 முடிய ரூ.49.79 இலட்சம் ஆகும்.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை

* தமிழக அரசால் நடப்பு நிதியாண்டில் பகுதி இரண்டு திட்டங்களின் கீழ் இத்துறைக்கு ரூ.74.65 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒன்பது புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப் பட்டது. இத்திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுவிட்டன.

* கள்ளத்தனமாக மணல் எடுத்த 31 நபர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், மறைமலை நகரில் பி.எம்.டபிள்யு – கார் தொழிற்சாலையைத் தொடங்கி வைத்தார்கள். (29.3.2007)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில், 8.3.2007 அன்று தலைமைச்செயலகத்தில், தமிழக அரசுக்கும் – இங்கிலாந்தைச் சார்ந்த கெபாரோ குழும நிறுவனத்தின் கெபாரோ வாகனப் பொருட்கள் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

டெஸ்மா மற்றும் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டங்கள் நீக்கம்



மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர்
மு.கருணாநிதி அவர்கள்

★ அரசு ஊழியர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் ஒத்துழைப்புடன் பணி செய்யும் சூழ்நிலை மற்றும் நன்கு புரிந்து கொள்ளும் தன்மையை உருவாக்குவதற்கும், 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகளைப் பேணி வருதல் (நீக்கச்) சட்டம் 31.5.2006 அன்று நிறைவேற்றப்பட்டது.

★ கட்டாய மதமாற்றத் தடை (நீக்கச்) சட்டம் 29.5.2006 அன்று சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு 31.5.2006 அன்று நிறைவேற்றப்பட்டது.

★ சமூகச் சீர்திருத்தத் துறை மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, தனித்துறையாகத் தலைமைச் செயலாளரின் நேரடிப் பார்வையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துறைகளில் ஒன்றாகச் செயல்படுகிறது.

பொதுத் துறை

★ 1987ஆம் ஆண்டு வன்னியர் சங்கத்தினர் நடத்திய போராட்டத்தில் உயிர் நீத்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த குடும்ப ஓய்வூதியத்தை நவம்பர் 2006 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.1,500லிருந்து ரூ.2000ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டில் உள்ள கருவுற்ற பெண்களுக்கு வழங்கப்பட்டு வரும் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், இலங்கைத் தமிழ்ப் பெண்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு மாதம் ரூ.1000 வீதம் 6 மாதங்களுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

★ 25 மாவட்டங்களில் உள்ள 120 அரசு முகாம்களில் 19,235 குடும்பங்களைச் சேர்ந்த 72,784 இலங்கை அகதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர பணக்கொடை 1.8.2006 முதல் இரட்டிப்பாக்கிக் கீழ்க்காணுமாறு வழங்கப்பட்டு வருகிறது.

	பழைய விகிதம் ரூ.	புதிய விகிதம் ரூ.
குடும்பத்தலைவர்	200	400
கூடுதல் பெரியவர்கள்	144	288
முதல் குழந்தை (12 வயதுக்குக் குறைவான)	90	180
அதற்குப் பின்னர் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும்	45	90



மாண்புமிகு
நிதி அமைச்சர்
பேராசிரியர் க.அன்பழகன்
அவர்கள்

நிதித்துறை

பொங்கல் பரிசு

★ அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் வண்ணம், பொங்கல் பண்டிகையின்போது மிகை ஊதியம், சிறப்பு மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு ஆகியன மீண்டும் வழங்கப்பட்டன. இதற்காக ரூ. 250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ மத்திய அரசிற்கு இணையாக தமிழக அரசும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான அகவிலைப்படி 29 சதவிகிதத்திலிருந்து 35 சதவிகிதமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

★ மின் அனுப்புகை முறை மூலம் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்குதலை, மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துதல் போன்ற மின்னாளுகை சிறப்பு முயற்சிகளை அறிமுகப்படுத்துவதற்காக மொத்தம் ரூ.15 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

★ கருவூலக் கணக்குத் துறைக்காக ஒரு வலை தளம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் 2006 டிசம்பர் 21ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த வலை தளத்தைப் பயன்படுத்தி சென்னையில் உள்ள அரசுப் பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் தங்களுக்குச் சேரவேண்டிய தொகைகள் அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட விவரத்தைக் காணலாம். இந்த வசதி மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தப்படும். இந்த வலை தளத்தில் அரசு ஊழியர்கள், ஓய்வூதிதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது.

★ தமிழ்நாடு ஒய்வூதியர் மருத்துவ நலநிதித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாதமும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.10 (ரூபாய் பத்து மட்டும்) பிடிக்கப்பட்டு, சிறப்பு அறுவை சிகிச்சை / சிறப்பு சிகிச்சை ஏற்பளிக்கப்பட்ட மருத்துவமனைகளில் ஓய்வூதியர்களுக்கு ரூ.50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) அல்லது மருத்துவச் செலவில் 75 சதவிகிதம் மருத்துவ உதவியாக வழங்கப்பட்டு வருகிறது. டிசம்பர் 2006இல், மாண்புமிகு முதலமைச்சர் ஓய்வூதியர் மருத்துவ நிதித் திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள விண்ணப்பங்களைத் தீர்வு செய்யும் பொருட்டு ரூ. 5 கோடி வழங்கியுள்ளார். ஓய்வூதியர் மருத்துவ நிதித் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 5,000 ஓய்வூதியர்கள் பயனடைகிறார்கள்.

★ 1.7.2007 முதல் திறந்த ஒப்பந்தப்புள்ளி முறையில் ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான படிவங்களை இணையதளத்திலிருந்து பெறவும், 1.10.2007 முதல் ஒப்பந்தப்புள்ளிகளைச் சம்பந்தப்பட்ட துறைகளின் இணையதளங்களின் மூலமாகவும் அளிப்பதற்கு வழிவகைச் செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றத்தில் 2007–2008ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்கள் (23.3.2007)

மாண்புமிகு
நிதி அமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன்
அவர்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

திட்ட ஒதுக்கீட்டு நிதி அதிகாரிப்பு

- 6.6.2006 அன்று புது டெல்லியில் மத்திய திட்டக்குழு துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இடையே நடந்த கூட்டத்தில் 2006–2007ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ.12,500 கோடி என்ற உயரளவிலான வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது 2005–2006 ஆம் ஆண்டு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் 37 சதவிகிதம் அதிகமாகும்.

- 2007–2008 ஆம் ஆண்டு பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாகும். 5.2.2007 அன்று புது டெல்லியில் மத்திய திட்டக்குழு துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இடையே நடந்த கூட்டத்தில் 2007–2008ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ.14,000 கோடி என்ற உயரளவிலான வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது 2006–2007 ஆம் ஆண்டு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் 12 சதவிகிதம் அதிகமாகும்.

- தேசிய சமவளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2006–2007 ஆம் ஆண்டில் திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.266.27 இலட்சம் மதிப்பீட்டில் நீர்ப்பாசனப் பணிகள், விவசாயிகளின் பங்கேற்புடன் தோட்டக்கலைப் பணிகள், பசுமைக் குடில்கள், ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சித் திட்டம் ஆகிய பணிகளும், கடலூர் மாவட்டத்தில் ரூ.337 இலட்சம் செலவில் கொள்ளிடம் மற்றும் வெள்ளாறு வடிநில பாசனப் பணிகள், ஹெலிகாப்டர் தளம் அமைத்தல், மேல்நிலைப் பள்ளிகளில் வகுப்பறைகள் மேம்பாடு மற்றும் இருக்கைகள் மேசைகள் வழங்கல், சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் ஆகியவையும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.1,012.45 இலட்சம் மதிப்பீட்டில் நீர்ப்பாசன கால்வாய் கட்டுதல் மற்றும் புனரமைப்பு, புதிய பண்ணைக் குட்டைகள் அமைத்தல்,

கோயில் குளங்கள் மற்றும் நீர் ஆதாரங்களை மேம்பாடு செய்தல், சாலைப் பணிகள், கிராமப்புற உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக் கட்டடம் மற்றும் அறிவியல் ஆய்வக உபகரணங்கள் வழங்கல் உள்ளிட்ட பணிகளும், சிவகங்கை மாவட்டத்தில் ரூ.451.75 இலட்சம் மதிப்பீட்டில் ஊரகப் பகுதிகளில் புதிய சாலைகள் அமைத்தல், ஆதிதிராவிட குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தல், கல்வித் துறையில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ளுதல், நீர்வடிப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் மற்றும் தோட்டக்கலை மேம்பாடு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வனத் துறையால் ரூ.282.50 இலட்சம் செலவில் 91 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. சோலை மற்றும் இதர காடுகளை உருவாக்குதல், தீத் தடுப்புக் கோடுகள், வன விலங்குகளைப் பாதுகாத்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நலன்களுக்காக ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு சிறப்பு திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ரூ.395 இலட்சம் செலவில் 1,099 மண்வள பாதுகாப்புப் பணிகள் வேளாண் பொறியியல் துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- சுமார் 31,700 சிறு மற்றும் குறு விவசாயிகள் பயனடையும் வகையில் ரூ.298.25 இலட்சம் செலவில் தோட்டக்கலைத்துறையால் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் நலனுக்காக ரூ.566.84 இலட்சம் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

- 40 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிக்கூடங்களைப் பழுது பார்க்கவும், 100 அங்கன்வாடி மற்றும் மதிய உணவுக்கூடம் கட்டுவதற்கும், 26 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளுக்குச் சாலை அமைக்கவும் அடிப்படை கட்டமைப்புப் பணிகளுக்கும் ரூ.230 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

- ரூ.432.71 இலட்சம் செலவில் சுற்றுப்புற சுகாதாரம், குடிநீர் வசதி, கழிவு நீர் சுத்திகரிப்பு, கழிவறைகள், இறைச்சிக் கூடங்களை மேம்படுத்துதல் போன்ற 64 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- குன்னூரில் ரூ.40.65 இலட்சம் செலவில் புதிய மருத்துவமனை வார்டு ஒன்றினை மருத்துவம் மற்றும் பொது சுகாதாரத் துறை நிறுவி உள்ளது.

- மேற்குமலைத்தொடர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2006–2007 ஆம் நிதியாண்டில் 1,593 எக்டேர் பரப்பளவை உள்ளடக்கிய 1,859 மண்வள பாதுகாப்புப் பணிகள் ரூ.584.30 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

❖ 383 ஹெக்டேர் பரப்பளவில் ரூ.209.23 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, இயற்கை வளங்கள் பாதுகாப்பு போன்ற காடுவளர்ப்புத் திட்டங்களுக்கும் அவற்றைக் கண்காணிப்பதற்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

❖ 1,224 ஏக்கரில் தீவன மேம்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ள ரூ.95.50 இலட்சம் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. 270 பயனாளிகளுக்குக் கலப்பின கன்று ஈனாத இளம்பசு மற்றும் 810 பயனாளிகளுக்குக் காட்டுக்கோழியும் வழங்கப்பட்டுள்ளன.

❖ ரூ.102.80 இலட்சம் செலவில் 24.162 கி.மீ தூரத்திற்கு, சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ மேலும், காதி மற்றும் கிராமத் தொழில்கள், சுற்றுலா, விடுபட்ட வசதிகளைப் பூர்த்தி செய்தல், பட்டுப்புழு வளர்ச்சி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நீர்பாசனம், மீன்வளம் மற்றும் தொலையுணர்வு ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், மத்திய திட்டக்குழு துணைத் தலைவர் திரு.மாண்டக்சிங் அலுவாலியா அவர்களுடன் தமிழகத்திற்கான 11ஆவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் 2007–08ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் முடிவு செய்வது குறித்துக் கலந்துரையாடினார்கள். (5.2.2007)



மாண்புமிகு
நிதி அமைச்சர்
பேராசிரியர் க.அன்பழகன்
அவர்கள்

தமிழ்
வளர்ச்சித்துறை

★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொடர் நடவடிக்கைகளாலும், வலியுறுத்தலாலும் மத்திய அரசு தமிழ் மொழியைச் செம்மொழி என அறிவித்துள்ளது. செம்மொழித் தொடர்பில் எண்பேராயம், ஐம்பெருங்குழு அமைக்கப்பட்டுள்ளது.

★ அறிவியல் தமிழ் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு அறிவியல் தமிழ் மன்றம் அமைக்கப்பட்டு, செயற்பட்டு வருகிறது.

★ எல்லைக் காவலர்களுக்குத் திங்கள்தோறும் வழங்கப்படும் நிதியுதவி ரூ.3,000லிருந்து ரூ.4,000ஆக 1.11.2006 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. எல்லைப் போராட்டக் காவலர்களின் மரபுரிமையர்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவியும் ரூ.1,500லிருந்து ரூ.2,000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ பரிதிமாற் கலைஞர் அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையருக்குப் பரிவுத்தொகை ரூ.15 இலட்சம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2.12.06 அன்று வழங்கப்பட்டது.

★ சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையருக்குப் பரிவுத்தொகை ரூ.20 இலட்சம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 8.7.06 அன்று வழங்கப்பட்டது.

★ புலவர் குழந்தை அவர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர் தம் மரபுரிமையருக்குப் பரிவுத்தொகை ரூ.10 இலட்சம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 8.7.06 அன்று வழங்கப்பட்டது.

★ மாயூரம் வேதநாயகம் பிள்ளை, சக்தி வை.கோவிந்தன், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், த.நா. குமாரசாமி, கா.சு. பிள்ளை, புலவர் குலாம்காதிறு நாவலர், தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், முனைவர் சி. இலக்குவனார், மகாவித்வான் தண்டபாணி தேசிகர், தி.ஜ. ரங்கநாதன் (தி.ஜ.ர.), நாரண துரைக்கண்ணன், முனைவர் மா.இராசமாணிக்கனார், முனைவர் வ.சு.ப.மாணிக்கம், புலவர் கா. கோவிந்தன் ஆகிய 14 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவர்களது மரபுரிமையர்களுக்கு ரூ.6 இலட்சம் வீதம் ரூ.84 இலட்சம் பரிவுத்தொகை வழங்கப்படும் என அரசு அறிவித்தது. இவர்களுள் மரபுரிமையர் சான்றாவணம் தந்துள்ள 13 தமிழறிஞர்களின் மரபுரிமையர்க்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ரூ.78 இலட்சம் பரிவுத்தொகை வழங்கப்பட்டது. இவ்வகையில் 16 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு இதுவரை மொத்தம் ரூ.123 இலட்சம் பரிவுத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழைச் செம்மொழி என அறிவிக்க வேண்டுமென நூறாண்டுகளுக்கு முன்பே முதற் குரல் கொடுத்தவரும், சூரியநாராயண சாஸ்திரி என்ற தம் பெயரைத் தனித் தமிழில் மாற்றிக் கொண்டவருமாகிய பரிதிமாற்கலைஞர் அவர்கள் பிறந்த வீடு அரசு நினைவில்லமாக மாற்றப்பட்டு, இல்ல உரிமையாளர்களுக்கு ரூ.3.84 இலட்சம் தொகை வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழறிஞர் மறைமலையடிகளார் அவர்களின் பெயர்த்தி திருமதி.சுந்தரத்தம்மை வயதான நிலையில் இன்னலுற்று வந்த நிலையைப் போக்கும் வகையில் அவர்களுக்கு நிதியுதவியாகவும், மருத்துவச் செலவிற்காகவும் ரூ.1.50 இலட்சம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 2.12.06 அன்று வழங்கப்பட்டுள்ளது.

★ திருமதி.சுந்தரத்தம்மை அவர்களின் மகள் செல்வி சொ.கலைச்செல்வி அவர்களுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுத் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தில் முதுநிலை ஒப்பச்சராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- 2007ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது பேராசிரியர் முனைவர் க.ப.அறவாணன் அவர்களுக்கும், 2006ஆம் ஆண்டுக்கான திரு.வி.க. விருது திரு. க. திருநாவுக்கரசு அவர்களுக்கும், பாரதியார் விருது திரு. மு. தமிழருவி மணியன் அவர்களுக்கும், பாரதிதாசன் விருது முனைவர் கா.செல்லப்பன் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 8.1.07 அன்று வழங்கப்பட்டது.

- நட்சத்திரத் தகுதி பெற்றுள்ள தனியார் உணவக விடுதி அறைகளில் ஆங்கில மொழியாக்கத்துடன் கூடிய திருக்குறள் நூலை வைத்திட ரூ.1 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. நூல் அச்சிடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் மறைந்த தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கியமைக்காக அவர்தம் மரபுரிமையருக்குப் பரிவுத்தொகையை வழங்கினார்கள். (21.03.2007)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் மறைந்த புலவர் குலாம் காதிறு நாவலரின் படைப்புகளை நாட்டுடைமையாக்கியமைக்காக, அவர்தம் மரபுரிமையினருக்குப் பரிவுத்தொகை வழங்கினார்கள் (8.4.2007)

வெளிப்படையான நிருவாகத்தை அளிக்க மாநில நிருவாகச் சீர்திருத்தக் குழு அமைப்பு

மாண்புமிகு
மின்சாரத்துறை அமைச்சர்
திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள்

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை

- ✶ தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம் 2003 (டெஸ்மா) திரும்பப் பெறப்பட்டது. (நீக்கப்பட்டது)
- ✶ அரசுப் பணிகளில் புதிய நியமனங்கள் செய்வதற்கான தடை நீக்கப்பட்டது. மேலும், அரசுப் பணிகளில் சேர்வதற்கான வயது வரம்பு 5 ஆண்டுகள் உயர்த்தப்பட்டது.
- ✶ அரசு ஊழியர்கள் முழுமையான ஓய்வூதியம் பெற தகுதியுள்ள பணிக்காலம் 33 ஆண்டுகளிலிருந்து 30 ஆண்டுகளாக மீண்டும் குறைக்கப்பட்டது.
- ✶ கடைசி 10 மாத பணிக்கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தின் அடிப்படையிலேயே ஓய்வூதியம் கணக்கிடப்பட வேண்டும் என்று இருந்த நிலையை மாற்றி கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவிகிதம் அல்லது கடைசி 10 மாத பணிக்கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவிகிதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் 31.7.2006 முதல் ஓய்வூதியக் கணக்கீடு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. இச்சலுகை 1.4.2003 அன்றும் அதற்குப் பிறகும் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் மற்றும் இறந்தவர்களுக்கும் பொருந்தும் என்று ஆணை வெளியிடப்பட்டது.
- ✶ ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையின் போது வழங்கப்பட்டு வந்த பொங்கல் போனஸ் /கருணைத்

தொகையை முந்தைய அரசு 2002 ஆம் ஆண்டிலிருந்து நீக்கம் செய்து இருந்தது. இந்த அரசு பொறுப்பேற்ற பின் இந்த ஆண்டு (2006–2007) பொங்கல் போனஸ் / கருணைத் தொகை வழங்கப்பட்டது.

✶ பணியிலிருக்கும்போது இறந்த அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் வாரிசுகளுக்கு அவரவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப கருணை அடிப்படையில் தொகுதி 'சி' மற்றும் 'டி' பணியிடங்களில் அரசுப் பணி நியமனங்கள் வழங்க ஆணையிடப்பட்டது.

✶ வெளிப்படையான மற்றும் ஊழலற்ற நிருவாகத்தினை அளிப்பதற்கு இந்த அரசு உறுதிபூண்டுள்ளதை மெய்ப்பிக்கும் வகையில், சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி, நீதியரசர் திரு.ஏ.கே. இராஜன் அவர்கள் தலைமையில் பத்து உறுப்பினர்கள் மற்றும் ஒரு உறுப்பினர் – செயலாளர் அடங்கிய மாநில நிருவாகச் சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களுக்கு அபரிமிதமான சலுகைகள் வழங்கிய
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு
தலைமைச் செயலக அரசு ஊழியர்கள் நன்றி தெரிவித்தனர். (23.06.2006)

இலவச நிலம் பெறும் ஏழை விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய இலவச மின்சாரம்

மாண்புமிகு
மின்சாரத்துறை அமைச்சர்
திரு. ஆற்காடு நா. வீராசாமி
அவர்கள்

எரிசக்தித் துறை

- 2006–07ஆம் ஆண்டில் 87 மெகாவாட் மின்சாரம் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாட்டின் மொத்த நிறுவுத்திறன் 10,098 மெகாவாட் ஆகும். 732 சுற்று கி.மீ. மிக உயரழுத்த மின்கம்பிகள், 2,475 கி.மீ. உயரழுத்த மின் கம்பிகள் மற்றும் 9,638 கி.மீ. தாழ்வழுத்த மின்கம்பிகளும் நிறுவப்பட்டுள்ளன. 7,769 மின் மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- புனல்மின் உற்பத்தி எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு 6,275 மில்லியன் யூனிட்டுகளை எட்டியுள்ளது.
- 2006–2007இல் வெவ்வேறு மின் அழுத்தங்களில் மொத்தம் 53 துணை மின் நிலையங்கள் இயக்கி வைக்கப்பட்டுள்ளன.
- சென்னை, அலமாதியில் 400 கிலோவோல்ட் துணை மின் நிலையம் ரூ.149 கோடி செலவில் இயக்கி வைக்கப்பட்டுள்ளது.
- 2006–07இல் மொத்தம் 7,30,783 புதிய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- சுயநிதி திட்டத்தின் கீழ், 2.4 இலட்சம் விவசாயி களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது.
- நீலகிரி மலைத் தொடர் பகுதிகளில் உள்ள அணுக முடியாத குன்றுகளில் வசிக்கும் 4,206 குடும்பங்களுக்கு, சாதனைக் காலமாக முப்பது நாட்களுக்குள் மின் இணைப்புகள் வழங்கப் பட்டுள்ளன.

* நிலமற்ற விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் வழங்கும் மாண்புமிகு முதலமைச்சரின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில், நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்த ஏதுவாக மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், திருவள்ளூர், திண்டுக்கல், விழுப்புரம், தூத்துக்குடி, வேலூர் ஆகிய மாவட்டங்களில் இலவச மின்சாரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன், மின் இணைப்புகள் உயர் முன்னுரிமையில் வழங்கப்படுகின்றன.

* புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்கள் மூலம் 28.2.2007 வரை மொத்தம் 3,725 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் உருவாக்கப்பட்டுள்ளது.

* தமிழ்நாடு மின் விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் வரி நீங்கலாக ரூ.42.97 கோடியை இலாபமாக ஈட்டியுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், ஊரக மின்மயமாக்கல் கழகத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. (2.4.2007)

பல ஆண்டுகள் தேர்தல் நடத்தப்படாமல் இருந்த ஊராட்சிகளில் தலைவர்கள் தேர்வு



மாண்புமிகு
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின்
அவர்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

* பல ஆண்டுகளாகத் தேர்தல் நடத்தப்படாமல் இருந்த பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்கச்சியேந்தல் ஊராட்சிகளுக்கு வெற்றிகரமாக தேர்தல் நடத்தப்பட்டது.

* தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், ரூ.152 கோடி மதிப்பில் 2,213 பணிகள் நிறைவேற்றப்பட்டன.

* விசைப்பம்பு ஆண்டு பராமரிப்புத் தொகை ரூ.7000–லிருந்து ரூ.7,500ஆகவும், கைப்பம்பு ஆண்டு பராமரிப்புத் தொகை ரூ.300–லிருந்து ரூ.600 ஆகவும் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

* மாநில நிதி ஆணைய மானியமாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ரூ.1,224 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

* 13.5.2006 அன்றைய தேதியில் நிலுவையிலிருந்த 1,54,245 பணிகளில் 1,49,558 பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன.

* இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 1998ஆம் ஆண்டு கான்கிரீட் கூரை அமைப்பதற்காக ரூ.12,000 மாநில அரசு வழங்கி

வந்ததை முந்தைய அரசு ரூ.9,000ஆக குறைத்து விட்டது. அதனை இவ்வரசு இந்த ஆண்டு முதல் மீண்டும் ரூ.9,000–லிருந்து, ரூ.12,000ஆக உயர்த்தி ஆணையிட்டுள்ளது.

- ✶ 19,023 சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதியாக ரூ.19.02 கோடியும், 3,536 சுய உதவிக்குழுக்களுக்குக் கடன் தொகையாக ரூ 34.42 கோடியும், மானியமாக ரூ.89.11 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1,195 தனி நபர் பயனாளிகளுக்கு மானியமாக ரூ 0.94 கோடியும், கடன் தொகையாக ரூ.1.78 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 24,647 ஆதி திராவிடர் / பழங்குடியினர், 50,838 மகளிர் மற்றும் 1,406 உடல் ஊனமுற்ற பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம்

- ✶ இத்திட்டத்தின் கீழ் ரூ.251.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த நிதியும் விடுவிக்கப்பட்டு 70,265 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

- ✶ சம்பூர்ணகிராம வேலைவாய்ப்புச் சிறப்புக் கூறு திட்டத்தின் கீழ் ரூ 57.03 கோடியில் 11,552 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுவரை 95,429 மெ.டன் அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம்

- ✶ கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பைப் பெருக்கும் நோக்கத்தோடு 6 மாவட்டங்களில் உள்ள 3,830 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தில் 2006 மே மாதம் வரை ரூ 3 கோடிக்கான வேலைவாய்ப்புகள் மட்டுமே உருவாக்கப்பட்டன. இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்த இந்த அரசு பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் எடுத்து இத்திட்டத்திற்காகத் தனியே ஊரக விலைப்பட்டியலை நிருணயித்து ரூ.80 தினசரி ஊதியமாகத் தொழிலாளர்கள் பெற்று வருகின்றனர். இதனால் இத்திட்டத்தின் சாதனையாக இதுவரை ரூ.152 கோடிக்கான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு 2,213 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதி – XII

- இத்திட்டத்தின் கீழ் 889 பேருந்துகள் செல்லும் 1,543.32 கி.மீ நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை வலுப்படுத்த ரூ.107.395 கோடி நிதி நபார்டு வங்கி மூலம் பெறப்பட்டு, இதுவரை ரூ.3.94 கோடி செலவில் 27.41 கி.மீ. நீளமுள்ள 20 சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன .
- மாவட்டங்களுக்கு ரூ. 50 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

12ஆவது நிதிக்குழு மானியம்

- இத்திட்டத்தின் கீழ் 2,540 கிராம ஊராட்சிகளில் ரூ. 103.60 கோடி நிதி ஒதுக்கீட்டில் பேருந்து செல்லும் 1,895.45 கி.மீ. நீளமுள்ள சாலைகளைப் பராமரிக்கவும், தார் சாலைகளை அமைக்கவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.103.60 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இதுவரை 11.85 கோடி செலவில் 252.38 கி.மீ. நீளமுள்ள சாலைகள் முடிக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

- மொத்த ஒதுக்கீடான ரூ 114 கோடியில், இத்திட்டத்தின் கீழ் ரூ. 71 கோடி நிதி விடுவிக்கப்பட்டு 3,672 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

- "அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" எனும் புதிய திட்டத்தின்படி, ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் ரூ. 20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அதன்படி இதுவரை மாவட்டங்களுக்கு ரூ.508 கோடி விடுவிக்கப்பட்டது. 85.402 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

- ✶ ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஆண்டு நிதி ரூபாய் 1.20 கோடியாக உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூபாய் 282 கோடி நிதி மாவட்டங்களுக்கும், சென்னை மாநகராட்சிக்கும் விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 53,105 பணிகள் எடுக்கப்பட்டு 10,826 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இதர முக்கிய சாதனைகள்

- ✶ பெரும்பாலான சிறப்பு சிற்றுராட்சிகளின் விருப்பத்தின்படி சிற்றுராட்சி செயற்பாடுகளில் உள்ள பல இடர்பாடுகளைக் களையும் வகையில் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ஆகிய சட்டங்களில் தேவையான சட்டத்திருத்தங்களைச் செய்து 561 சிறப்பு சிற்றூராட்சிகளில் மிகப் பெரும்பான்மையானவை மீண்டும் பேரூராட்சிகளாக வகைப்பாடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

பணியமைப்பு

- ✶ அரசு ஊழியர்களுக்கு வழங்குவது போல் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கும் சிறப்பு சேம நல நிதி ரூ.5,000–லிருந்து, ரூ.10,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- ✶ ஊராட்சி ஒன்றியங்களில் தினக்கூலி அடிப்படையில் 20 வருடத்திற்கு மேலாக பணியாற்றும் 933 கைப்பம்பு உதவியாளர்களை ஊராட்சி ஒன்றியங்களில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் பணியிடங்களில் ஊதிய ஏற்ற முறையில் பணியமர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

- ✶ ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்த அலுவலர்கள் 04.05.2000 முதல் 15.05.2000 (12 நாட்கள்) வரை போராட்டத்தில் ஈடுபட்ட காலத்தைப் பணிக்காலமாக வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிட்டுள்ளது.

✶ தற்போது ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி உதவியாளர்களுக்கும் மற்றும் பகுதி நேர எழுத்தர்களுக்கும் 01.09.2006 முதல் காலமுறை ஊதியம் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் 12,618 கிராம ஊராட்சிகளில் உள்ள பணியாளர்கள் பயன் பெறுவர்.

✶ வளர்ச்சித் திட்டங்களைத் துரிதமாகச் செயல்படுத்த இவ்வரசு தற்போது காலியாக உள்ள கீழ்க்கண்ட தொழில் நுட்பப் பணியாளர்களை

i) பணிப் பார்வையாளர்கள் 407

ii) இளநிலை வரை தொழில் அலுவலர்கள் 54

iii) சாலை ஆய்வாளர்கள் 657

வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம், பதிவு மூப்பின் அடிப்படையில் பணியமர்த்திக் கொள்ள ஆணையிட்டுள்ளது.

✶ துணை வட்டார வளர்ச்சி அலுவலராகப் பதவி உயர்வு பெற தற்போதுள்ள விதிமுறைகளைத் தளர்த்தி, விரிவாக்க அலுவலர்கள், ஊராட்சி விரிவாக்க அலுவலர் நிலையில் ஒரு வருடம் பணிபுரிந்தாலே, பணி மூப்பின் அடிப்படையில் பதவி உயர்வு அளித்து ஆணையிட்டுள்ளது.

✶ 2006–07இல் ஊரக வளர்ச்சித் துறையில் காலியாக உள்ள 1,334 இளநிலை உதவியாளர் பணியிடங்களை நிரப்ப அரசு அனுமதி அளித்துள்ளது. அதில் 1,001 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் தமிழ்நாடு தேர்வாணைக்குழு மூலமாகவும், மீதமுள்ளவற்றை கருணை அடிப்படையிலும் நிரப்ப அரசு அனுமதி அளித்துள்ளது.

✶ ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறையில் காலியாக உள்ள 599 தட்டச்சர் பணியிடங்களைத் தொழில்நுட்பக் கல்வி ஆணையரகம் மூலமாக நிரப்புவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்
உள்ளாட்சித் தலைவர்கள் கருத்தரங்கில்,
உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களுக்கான
பயிற்சிக் கையேட்டை வெளியிட்டார்கள். (18.03.2007)

நாகப்பட்டினத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்
ரூ.33.22 கோடி மதிப்பீட்டில் 303 புதிய கட்டடங்களைத் திறந்து வைத்து,
ரூ.63.30 கோடி மதிப்பீட்டில் 403 புதிய திட்டப் பணிகளுக்கு
அடிக்கல் நாட்டினார். (21.01.2007)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் சமத்துவப் பெருவிழாவில் பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்கச்சியேந்தல் ஊராட்சித் தலைவர்களைப் பாராட்டி கேடயங்கள் வழங்கினார். (13.11.2006)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற உலக மகளிர் தின விழாவில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கேடயம் மற்றும் வங்கி கடன் உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள். (8.3.2007)

அங்கீகரிக்கப்படாமல் இருந்த மனைகளை வரன்முறைப்படுத்தி அரசாணை



மாண்புமிகு
ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின்
அவர்கள்

நகராட்சி நிருவாகம்

- ✶ தமிழகத்தில் உள்ள நகராட்சிகளில் சுமார் 2,600 அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் சுமார் 90 ஆயிரம் மனைகள் அங்கீகரிக்கப்படாமல் உள்ளன என்பதால் இவற்றை வரன்முறைப்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதுவரை சென்னையைத் தவிர ஐந்து மாநகராட்சிகளில் 25,343 மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டு, இதன் மூலம் சுமார் ரூ.22.81 கோடி வருமானம் கிடைத்துள்ளது. இதே போல், அனைத்து நகராட்சிகளில் இதுவரை 25,668 மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டு அதன்மூலம் ரூ.10.81 கோடி வருமானம் கிடைத்தது.

- ✶ 2006–2007 ஆண்டில் நகராட்சிகளில், ரூ.265.64 கோடி செலவில் 2,536 கி.மீ. நீள சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டன. ஐந்து மாநகராட்சிகளில் ரூ.158.00 கோடி செலவில் 1,161 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 2006–2007ஆம் ஆண்டில் மேம்பாடு செய்யப்பட்டன.

- ✶ நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் கூடுதல் தெரு விளக்குகள் தேவைப்படும் இடங்களில் ஒவ்வொரு முப்பது மீட்டருக்கும் ஒரு மின் கம்பத்துடன் கூடிய மின் விளக்குகள் என்ற திட்டத்தின் குறிக்கோளை அடைய நிதி ஆதார வசதியைப் பொறுத்து, 2006–2007ஆம் ஆண்டில் நகராட்சிகளில் 17,418 எண்ணிக்கையிலான தெருவிளக்குகள் ரூ.16.96 கோடி செலவில் போடப்பட்டன. ஐந்து மாநகராட்சிகளில் 10,230 எண்ணிக்கையிலான தெருவிளக்குகளும் ரூ.7.88 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

- ✶ 10 நகராட்சிகளுக்கு கூடுதலாக 10,600 குடிநீர்க் குழாய் இணைப்புகளுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

- ✶ 6 நகராட்சிகளில் மொத்தம் 60 குழுப் பணிகள் (சுனாமி நிவாரணப் பணிகள்), தயாரிக்கப்பட்டு அதில் 26

பணிகளுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளன. 21 பணிகளுக்கு ஒப்பந்த மதிப்பீடுகள் தயாரித்து, ஆசியன் வளர்ச்சி வங்கியின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

- சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுப் பணிகளுக்காக 29.9.2006 அன்று ரூ.2.015 கோடியும் 5.12.2006இல் ரூ.3.726 கோடியும் அரசால் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்தொகையில், வாழ்வாதாரப் பணிகளுக்காக 1,105 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.331.50 இலட்சம் விடுவிக்கப்பட்டது. இதைத் தவிர புதிதாக 504 குழுக்கள் உருவாக்குவதற்கு ரூ.10.8 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில்
சுனாமி அவசரகால வாழ்வாதார நிதி உதவிகளை வழங்கினார்.

சென்னை மாநகராட்சி

- சென்னையில் ரூ.172 கோடி மதிப்பீட்டில் 12 மேம்பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

- தெலுங்கு கங்கை திட்டத்தின் கீழ், கண்டலேருவிலிருந்து 15.8.2006 அன்று தண்ணீர் திறந்து விடப்பட்டது. அது 19.8.2006 அன்று தமிழக எல்லைப் பகுதியை அடைந்தது. 8.2.2007 வரை பெறப்பட்ட நீரின் அளவு 5.184 டி.எம்.சி. ஆகும்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னையில்
மேம்பாலம் கட்டும் இடங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். (4.3.2007)

✶ சென்னை மாநகருக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவானது 540 மில்லியன் லிட்டரில் இருந்து 575 மில்லியன் லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.

✶ சென்னை மாநகருக்கு அருகாமையிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு நாளொன்றுக்கு 27 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது.

✶ 26.35 கிலோ மீட்டர் நீளமுள்ள 62 பேருந்து சாலைகள் புதுப்பிக்கப்பட்டன.

✶ 415 கிலோ மீட்டர் நீளமுள்ள 1,517 உட்புறச் சாலைகள் புதுப்பிக்கும் பணிகளும், 100 கிலோ மீட்டர் நீளமுள்ள 146 நடைபாதைகள் சீரமைக்கும் பணிகளும், ரூ.5,928 இலட்சங்கள் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

✶ 8 வகுப்பறைகள் ரூ.33.35 இலட்சம் செலவில் கட்டப்பட்டன.

✶ தற்காலிக தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 210 இளநிலை மற்றும் இளநிலை முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களுக்கு காலநிலை ஊதியம் வழங்கப்பட்டது.

தற்காலிக தொகுப்பூதிய அடிப்டையில் பணியாற்றி வந்த மாநகராட்சி மழலையர் பள்ளி 100 ஆசிரியர்கள், 92 ஆயாக்கள், 24 அலுவலக உதவியாளர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்படாத காலமுறை ஊதியம் 14.6.2006 முதல் வழங்கப்பட்டது.

✶ மாநகராட்சி மருத்துவமனைகளில் 22,000 நபர்களுக்கு புற நோய் மற்றும் உள்ளிருப்பு மருத்துவ சேவை சுமார் ரூ.15.00 லட்சம் செலவில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

* சுகாதார துறையில் களப்பணியாளர்கள் மற்றும் தற்காலிக ஊழியர்கள் இந்நோய் பாதிப்பு கண்டறியப்பட்ட நாட்களில் இருந்து 3500 குழுக்கள் மூலம் வீடு விடாகச் சென்று சிகிச்சை மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொண்டார்கள்.

* இந்த நோயை பரப்பும் கொசுக்களை கட்டுப்படுத்த கிருமி நாசினிகள் ரூ.15.00 லட்சம் செலவில் வாங்கப்பட்டது.

* 410 சிகிச்சை மூகாம்கள் நடத்தப்பட்டன.

* இது தொடர்பாக 1212 வழிப்பாட்டு தலங்களில் (கோயில்கள், மசூதிகள் மற்றும் ஆலயங்கள்) மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

* சென்னை மாநகரில் பயிலும் 3.00 லட்சம் பள்ளி மாணவர்கள் மூலம் சுகாதார தூதுவர்கள் (Health Ambassador) என்ற விழிப்புணர்வு அட்டைகள் வழங்கி அவர்களின் வீடுகளில் கொசுப்புழு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

* ரூ.30 லட்சம் செலவில் பிறப்பு இறப்பு சான்றிதழ் பதிவுகளை கணிணி மயமாக்குதல்.

* ரிப்பன் மாளிகையில் உள்ள 300 வருட பதிவேடுகள் கணிணி மயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

* தமிழகத்தின் ஒரே தொற்று நோய் மருத்துவமனையான சென்னை மருத்துவமனையில் தொற்று நோய் வார்டுகள் பழுது பார்த்தல் மற்றும் 20 குடியிருப்பு வசதிகள் சுமார் 1 .25 கோடி செலவில் செய்யப்பட்டுள்ளன.

* புதிதாக தோன்றிவரும் தொற்று நோய்களுக்கான பரிசோதனை வசதிகளை மேம்படுத்த ரூ.15 லட்சம் செலவில் பரிசோதனை கருவிகளும் வசதிகளும் ஏற்படுத்தப்படுத்தப்பட்டன (டெங்கு, HIV, சிக்குன் குன்யா).

* 63,000 காசநோய் உள்ளவர்கள் என சந்தேககிக்கப்பட்ட நபர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு 7,500 பேருக்கு நோய் உள்ளது கண்டறியப்பட்டு ,குறுகிய கால காசநோய் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

* சென்னையில் உள்ள 36 மயானங்களில் 12 மயானங்களில் நவீன எரியூட்டும் வசதிகள் ரூ.15 கோடி அளவில் செய்யப்பட்டது, மீதமுள்ள 24 மயானங்களில் ரூ.28 கோடி அளவில் புதுப்பித்தல் மற்றும் நவீன எரியூட்டும் வசதிகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

* மாண்புமிகு தமிழக முதல்வரின் வருமுன் காப்போம் திட்டத்தின் மூலம் இதுவரை 7 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. முப்பதாயிரத்திற்கு மேற்ப்பட்ட மக்கள் இதில் பயன் அடைந்தனர்.

* 1,20,000 சென்னை மாநகராட்சி மாணவ மாணவிகள் மருத்துவர்களால் பரிசோதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

* இந்தியாவிலேயே முதன்முறையாக இரண்டு லட்சம் மாணவர்களுக்கு ஒரே நாளில் குடற்புழு நீக்கப் பணி செய்யப்பட்டு ரத்த சோகை தடுப்பு பணிக்கு வித்திடப்பட்டது. இதற்காக சென்னை மாநகராட்சி ரூ.20 லட்சம் செலவினத்தை மேற்கொண்டது.

* நவீன இறைச்சிக் கூடங்களை சென்னை மாநகரின் வெளிப்பகுதிகளில் தொடங்க ரூ.3.5 கோடி ஒதுக்கப்பட்டு வில்லிவாக்கத்தில் ஒரு இறைச்சி கூடம் மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களால் (ரூ.40 லட்சம் செலவில்) திறக்கப்பட்டு இயங்கிவருகிறது.

* பொது சுகாதாரத் துறையில் 5 வருடமாக காலியாக இருந்த 300–க்கும் மேற்பட்ட பணியிடங்களை நிரப்ப அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

* சென்னை மாநகராட்சியில் எழில்மிகு பூங்கா மற்றும் விளையாட்டுத்திடல்கள் புதிதாக அமைக்கவும் சிதிலடைந்த பூங்காக்களை மேம்படுத்தி நவீனப்படுத்தவும் ரூ.7 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் 14 பூங்காக்களின் பணிகள் நிறைவடைந்துள்ளன.

* 87 மழைநீர் வடிகால்வாய்கள் 31கி.மீ நீளத்தில் ரூ.11.70 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

* சென்னை மாநகராட்சி 27.92 கி.மீ.நீளத்தில் 16 கால்வாய்களை பராமரித்து வருகிறது. 2006 பருவமழை தொடங்குவதற்கு முன்னர் இவ்வனைத்து கால்வாய்களிலும் பிளாஸ்டிக் கழிவுகள் ஆகாயத்தாமரை மற்றும் தூர் முழுவதுமாக அகற்றப்பட்டன.

* சென்னை மாநகராட்சி 850 கி.மீ.நீளமுள்ள மழைநீர் வடிகால்வாய்களை பராமரித்து வருகிது. 2006 பருவ மழை தொடங்குவதற்கு முன்னர், இவ்வனைத்து மழைநீர் வடிகால்களிலும் இருமுறை தூர் முழுவதுமாக அகற்றப்பட்டன.

* 4 அலுவலக உதவியாளர்களுக்கு கலந்தாய்விற்கு பிறகு துப்புரவு ஆய்வாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

* 102 துப்புரவு பணியாளர்களுக்கு கலந்தாய்விற்கு பிறகு துப்புரவு மேஸ்திரியாக பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

பேரூராட்சிகளில் கூட்டுக்குடிநீர்த் திட்டம்



மாண்புமிகு
ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின்
அவர்கள்

குடிநீர் வடிகால் வாரியம்

★ திருநெல்வேலி மாநகராட்சி பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் ரூ.66 கோடி மதிப்பில் நிறைவேற்றப்பட்டன.

★ கரூர் மற்றும் இனாம் கரூர் நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைப் பணிகள் ரூ.35 கோடியில் நிறைவேற்றப்பட்டன.

ஊரகக் குடிநீர்த் திட்டம்

1) 7,742 ஊரகக் குடியிருப்புக் குடிநீர்த் திட்டங்கள்
2) 3,274 அரசுப் பள்ளிகளில் குடிநீர்த் திட்டங்கள்
3) 421 நீர் செறிவூட்டும் கட்டமைப்புகள்
4) 60 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்
5) 55 நகர குடிநீர்த் திட்டங்கள்
6) 2,050 ஊரகப் பகுதி புனரமைப்புப் பணிகள்

ஆகியவை நிறைவேற்றப்பட்டுள்ளன.

★ இராமநாதபுரம் மாவட்டத்தில் 5 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த 3,163 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள சுமார் 15.65 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த ரூ.616 கோடிக்கு அரசின் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

★ தூத்துக்குடி மாவட்டத்தில் 239 கடலோர / ஊரகக் குடியிருப்புகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை மற்றும் விருதுநகர் நகராட்சிகள்,

மல்லான்கிணறு மற்றும் காரியாப்பட்டி பேரூராட்சிகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் 67 குடியிருப்புகள் ஆகியவற்றிற்கு ரூ.68 கோடி மதிப்பீட்டில் சுமார் 1.31 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

★ நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகப்பட்டினம் நகராட்சி, கீழ்வேளூர், வேளாங்கண்ணி பேரூராட்சிகளுக்கு ரூ.98.85 கோடி மதிப்பீட்டில் சுமார் 1.34 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

★ நாமக்கல் மாவட்டத்தில் சேந்தமங்கலம், காளப்பநாயக்கன்பட்டி பேரூராட்சிகள் மற்றும் 318 குடியிருப்புகளுக்கான ரூ.30.49 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், தாமிரபரணி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கிவைத்து, விருதுநகர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார் (24.12.2006)

பயிர்க்கடன் வட்டி விகிதம் குறைப்பு

மாண்புமிகு
வேளாண்மைத்துறை அமைச்சர்
திரு. வீரபாண்டி எஸ்.ஆறுமுகம்
அவர்கள்

வேளாண்மைத் துறை

★ ரூ.7,000 கோடி அளவில் கூட்டுறவுப் பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. இதுவரை 22,39,487 விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன் தள்ளுபடி சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளன.

★ 2006–2007ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி இதுவரை அடைந்திராத 96.04 இலட்சம் மெ.டன் என்ற அளவை அடைந்துள்ளது. கூடுதலாக 1 இலட்சம் எக்டேரில் மக்காச்சோளப் பயிரும் 3 இலட்சம் எக்டேரில் பயறு வகைப் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்பட்டதால் உணவு தானியப் பயிர்கள் சாகுபடிப் பரப்பு 41.60 இலட்சம் எக்டேர் என்ற அளவை எட்டியது. 2006–07ஆம் ஆண்டில் உணவுப் பயிருக்கான பரப்பு இலக்கு 39.70 இலட்சம் எக்டேர் ஆகும்.

★ கூட்டுறவு வங்கியில் வழங்கப்படும் பயிர்க்கடன் மீதான வட்டி விகிதம் 9 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதமாக குறைக்கப்பட்டது.

★ அனைத்து வேளாண் பம்பு செட்டுகளுக்கு இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுகிறது.

★ சான்று பெற்ற 18,150 மெ.டன்கள் நெல் விதைகள், 450 மெ.டன்கள் சிறுதானிய விதைகள், 1,170 மெ.டன்கள் பயறுவிதைகள், 3,700 மெ.டன்கள் எண்ணெய் வித்துக்கள் மற்றும் 190 மெ.டன்கள் பருத்தி விதைகள் ரூ.29.779 கோடி செலவில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

★ 1,413 மெ.டன்கள் நுண்ணூட்டக் கலவை உரங்கள் ரூ.3.12 கோடி செலவில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது.

★ நுண்ணுயிர் உரம் 8.21 இலட்சம் பாக்கெட்டுகள் ரூ.3.67 கோடி செலவில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது.

★ 4.5 இலட்சம் நெட்டை தென்னங்கன்றுகள், 3.2 இலட்சம் நெட்டை x குட்டை தென்னங்கன்றுகள் மற்றும் 0.06 இலட்சம் குட்டை x நெட்டை தென்னங்கன்றுகள் ரூ.1.37 கோடி செலவில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது.

★ சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களில் மறுசீரமைப்பிற்காக மூன்றாண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட திட்டம் ரூ.12.69 கோடி செலவில் முழுமையாக முடிக்கப்பட்டது.

★ 7,366 குழுக்களுக்குத் தொழில் முனைவோர் பயிற்சி வழங்கப்பட்டது. இக்குழுக்கள் புதிய தொழில் தொடங்க குழு ஒன்றிற்கு ரூ.3,500 வீதம் வழங்கி ரூ.3.53 கோடி செலவில் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

★ உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் உற்பத்தி மையங்கள் அமைக்க ஒரு குழுவிற்குச் சுழல்நிதி ரூ.5 இலட்சம் வீதம் 9 மகளிர் குழுக்களுக்கு ரூ.0.45 கோடி வழங்கப்பட்டது.

★ 218 மகளிர் குழுக்களுக்குப் பண்ணை இயந்திரங்கள் 25 சதவிகித மானியத்தில் ரூ.0.67 கோடி செலவில் வழங்கப்பட்டது. இப்பண்ணை இயந்திரங்களை சொந்த உபயோகத்திற்கோ, வாடகைக்கோ விடலாம்.

★ 10,100 பயிர்ப்பாதுகாப்புக் கருவிகள் மானிய விலையில் ரூ.1.12 கோடி செலவில் வழங்கப்பட்டது.

★ தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கடன்பெறாத விவசாயிகளுக்குப் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் பலன் கிடைக்கும் வகையில் காப்பீட்டுத் தொகையில் 50 சதவிகித மானியம் ரூ.1.16 கோடி வழங்கப்பட்டு 1.05 இலட்சம் விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

★ விவசாயிகள் தங்கள் நிலத்தில் உள்ள மண் வளத்தை அறிந்து அதன் அடிப்படையில் தேவைக்கேற்ப உரமிட்டு பயிர்ச்சாகுபடி மேற்கொள்வதற்காக, அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய மண்வள அட்டை மாநிலத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் படிப்படியாக வழங்கப்படும். 2006–07ஆம் ஆண்டில் இதுவரை சுமார் 4.12 இலட்சம் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ வேர்வாடல் நோயால் பாதிக்கப்பட்ட 1,11,279 தென்னை மரங்களை வெட்டி அகற்றுவதற்கு ஒரு மரத்திற்கு ரூ.250 வீதம் ரூ.2.78 கோடி உதவித் தொகை வழங்கி, திட்டம் செயல்படுத்தப்பட்டது.

★ ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், இத்திட்டம் தமிழ்நாட்டில் சென்னையைத் தவிர இதர 29 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தரமான நடவுச் செடிகள், வீரிய ஒட்டுக் காய்கறி விதைகள் 50 சதவிகித மானிய விலையில் தோட்டக்கலைப் பயிர்ச்சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

★ ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சேலம், நாமக்கல், தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், திருச்சி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள பழங்குடி விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியத்தில் தரமான நடவுச் செடிகள், காய்கறி விதைகள் விநியோகிக்கப்படுகிறது. உயர் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்குப் பயிற்றுவிக்க சுற்றுலா மூலம் பயிற்சி மையங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

★ மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், தேனி, மதுரை, திண்டுக்கல், விருதுநகர், கோயம்புத்தூர், ஈரோடு, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள தோட்டக்கலைப் பயிர்சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. விருதுநகர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு 25 சதவிகித மானியத்தில் தரமான நடவுச் செடிகள் மற்றும் இதர தோட்டக்கலை இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

★ மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் பழங்களின் தரமான நடவுச் செடிகள், உயர் விளைச்சல் காய்கறி விதைகள், நறுமணப்பயிர்களின் நடவுச் செடிகள், பண்ணைக் கருவிகளான தெளிப்பான் மற்றும் ஆயில் இன்ஜின் ஆகியன 25 சதவிகித மானியத்தில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள தோட்டக்கலை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

★ "மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19.05.2006 அன்று உழவர் சந்தைகளுக்குப் புத்துயிரூட்டி அதன் செயற்பாட்டினை ஊக்குவிக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென அறிவித்துள்ளார்கள்". அதன்படி, செயல்பட்டு வந்த 75 உழவர் சந்தைகளை ரூ.31 இலட்சம் செலவிலும் மற்றும் சென்ற ஆட்சியில் மூடப்பட்ட 28 உழவர் சந்தைகளை ரூ.11 இலட்சம் செலவிலும் புதுப்பிக்கப்பட்டு மீண்டும் 3.6.2006 திறக்கப்பட்டன.

★ தற்போது, சராசரியாக நாளொன்றிற்கு 1,010 மெட்ரிக் டன் காய்கறி மற்றும் பழங்கள் ரூபாய் ஒரு கோடி மதிப்பில் 7,500 விவசாயிகள் மூலம் கொண்டு வந்து விற்பனை செய்யப்படுகின்றன. இதன் மூலம் தினந்தோறும் சுமார் 1,90,000 நுகர்வோர் பயன்பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

★ வங்கித்துறை, இடுபொருள் விற்பனையாளர்கள், அரசு சாரா நிறுவனங்கள் போன்றவற்றில் 175 மாணவர்கள் பல்கலைக்கழக வேலைவாய்ப்பு மையத்தின் மூலம் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

★ பெரம்பலூரில் பருத்தி ஆராய்ச்சி நிலையம், திண்டுக்கல்லில் மக்காச்சோளம் ஆராய்ச்சி நிலையம் ஆகியவை ரூ.150 இலட்சம் மதிப்பில் தொடங்க அரசு அனுமதியளித்துள்ளது.

★ வேளாண் அறிவியல் மையங்கள் 15 (அண்மையில் தருமபுரி மாவட்ட பாப்பாரபட்டியில் தொடங்கப்பட்டுள்ள மையத்தையும் சேர்த்து) மற்றும் பயிர் மருத்துவ மையம் 5 ஆகியன ஆராய்ச்சி முடிவுகளை வேளாண் பெருமக்களுக்கு எடுத்துச் செல்ல புதிய விரிவாக்க அணுகுமுறையான "ஆத்மா" (வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை) முறையில், "சமித்தி" (மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி நிறுவனம்) வழியாகச் செயல்படவுள்ளது.

★ இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் உழவர் பயிற்சி விடுதி அமைக்க ரூ.150 இலட்சம் வழங்கியுள்ளது. தமிழக அரசின் பரிந்துரையின் பேரில் மைய அரசு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கென சிறப்புநிதியாக ரூ.5,000 இலட்சம் வழங்கியுள்ளது.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்
புதிய அமைச்சரவை பதவியேற்பு விழா மேடையில் விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை
தள்ளுபடி செய்து கையொப்பமிட்டார். (13.5.2006)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தொடங்கிவைத்த
தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு
மற்றும் நலத்திட்டம் (22.2.2007)

மாண்புமிகு
பொதுப்பணி மற்றும்
சட்டத் துறை அமைச்சர்
திரு. **துரைமுருகன்**
அவர்கள்

போர்க்கால அடிப்படையில் தூர் வாரும் பணிகள் முடிப்பு

நீர்வள ஆதார அமைப்பு

★ காவிரி பாசன பகுதிகளில் உள்ள ஆறுகள் மற்றும் வாய்க்கால்களில் ரூ.10 கோடிக்கான மதிப்பீட்டில் 425 தூர்வாரும் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு 15 நாட்களில் முடிக்கப்பட்டன.

★ நான்கு ஆண்டுகளுக்குப் பின் மேட்டூர் அணை பாசனத்திற்கு குறிப்பிட்ட காலமான ஜூன் 12ஆம் தேதி திறக்கப்பட்டது. இதனால் விவசாயிகள் 3.113 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யவும், 10.588 லட்சம் ஏக்கரில் சம்பா பயிர் சாகுபடி செய்யவும் சுமார் 2.562 லட்சம் ஏக்கரில் தாளடி சாகுபடி செய்யவும் முடிந்தது.

பொதுப்பணித் துறை

மேட்டூர் அணை

பணிகள் முடிக்கப்பட்டு பாசனத்திற்காக திறக்கப்பட்ட திட்டம்

வ. எண்	திட்டத்தின் பெயர்	மாவட்டம்	பயனடையும் பரப்பு
1	கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டத்தில் இடது மற்றும் வலது புற கால்வாய் புனரமைத்தல்	கிருஷ்ணகிரி	3,677 எக்டேர்

பணிகள் முடிக்கப்பட்டு நடப்பாண்டில் பாசனத்திற்காக திறக்கப்படவுள்ள திட்டங்கள்

வ. எண்	திட்டத்தின் பெயர்	மாவட்டம்	பயனடையும் பரப்பு
1	வரட்டாற்றுக்கு குறுக்கே நீர்த்தேக்கம்	தர்மபுரி	2,068 எக்டேர்
2	மிருகண்டா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம்	திருவண்ணாமலை	1,291 எக்டேர்
3	ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம்	வேலூர்	830 எக்டேர்
4	கமண்டலாற்றின் குறுக்கே செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம்	திருவண்ணாமலை	2,710 எக்டேர்
5	வைகை ஆற்றின் குறுக்கே படுகை அணை	கீழப்பெருங்கரை கிராமம், இராமநாதபுரம் மாவட்டம்.	211 எக்டேர்
6	கோட்டோடைப்பட்டியின் அருகில் உள்ள ஓடையில் புதியதாக பாசனக்குட்டை அமைக்கும் பணி	ஆண்டிபட்டி வட்டம், புள்ளிமான் கோம்பை கிராமம், தேனி மாவட்டம்.	50 எக்டேர்
7	வரட்டாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி	பெரியகுளம் தாலுக்கா, வடவீரநாயக்கன்பட்டி கிராமம், தேனி மாவட்டம்.	16 எக்டேர்
8	குறுங்கூர் ஆற்றின் குறுக்கே புதிய கண்மாய் அமைக்கும் பணி	கொடைக்கானல் தாலுக்கா, பூண்டி கிராமம், திண்டுக்கல் மாவட்டம்.	68 எக்டேர்
9	வண்டல் ஓடை திட்டம்	திருநெல்வேலி	978 எக்டேர்
10	பீயாற்றின் குறுக்கே அணைக்கட்டு	திருவாடானை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்	166 எக்டேர்

- ★ சென்னை மாநகர நீர்வழித்தடங்களான கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் மற்றும் வேளச்சேரி வடிகால் போன்ற நீர்வழித் தடங்களில் வடகிழக்குப் பருவமழையால் ஏற்படக் கூடிய வெள்ள அபாயத்தைத் தவிர்க்கும் பொருட்டு ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு தூர்வாரும் பணிகள் செவ்வனே செய்து முடிக்கப்பட்டன.

- ★ நீர்வள ஆதார அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள ஆற்றுப்படுகையில் தற்பொழுது 89 மணல் விற்பனை நிலையங்களில் தொடர்புடைய மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடன் மணல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 31.03.2007 முடிய உள்ள காலத்தில் மொத்தம் 21.351 இலட்சம் லாரி லோடுகள் மணல் விற்பனை செய்யப்பட்டு அதன் மூலம் அரசுக்கு ரூ.128.11 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

கட்டட அமைப்பு

- ★ தேனி, வேலூர், ஆசாரிப்பள்ளம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மருத்துவமனைகளில் ரூ.200 கோடி செலவில் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

- ★ நபார்டு நிதி உதவியுடன் 2006–2007 ஆம் ஆண்டில் ஆறாம் கட்டமாக, 13 மாவட்டங்களில் உள்ள 234 உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வகம், கழிவறை மற்றும் தண்ணீர் வசதி அமைப்பதற்கு ரூ.161.32 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 203 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 27 இடங்களில் பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன மற்றும் 2 இடங்களில் திருத்திய நிருவாக ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டில் ஏழாம் கட்டமாக நபார்டு நிதி உதவியுடன் செய்வதற்காக 16 மாவட்டங்களில் உள்ள 195 உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வகம், கழிவறை மற்றும் தண்ணீர் வசதி அமைத்து வழங்குவதற்கு ரூ.131.69 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 131 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 60 இடங்களில் பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன மற்றும் 4 இடங்களில் திருத்திய நிருவாக ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

சட்டப் படிப்பிற்கு இடங்கள் அதிகரிப்பு

மாண்புமிகு
பொதுப்பணி மற்றும்
சட்டத்துறை அமைச்சர்
திரு. **துரைமுருகன்**
அவர்கள்

சட்டம்

- ✶ சென்னை டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் உள்ள மூன்றாண்டு சட்டப் படிப்பில் முதலாண்டு சேர்க்கைக்கான இடங்கள் 80லிருந்து 321 ஆகவும், ஐந்தாண்டு சட்டப்படிப்பில் முதலாண்டு சேர்க்கைக்கான இடங்கள் 80லிருந்து 241 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

- ✶ சட்டக் கல்வி இயக்ககத்திற்காகத் தனியாகக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.25.83 இலட்சமும், கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரியில் மாணவியர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்ட ரூ.124.37 இலட்சமும், மாணவர்கள் விடுதிக்குக் கூடுதல் அறைகள் கட்ட ரூ.22.37 இலட்சமும் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

- ✶ சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் மூன்றாண்டு மற்றும் ஐந்தாண்டு சட்டப் படிப்புகளில் முதலாம் ஆண்டில் தமிழ் வழியில் கல்வி கற்பிக்கத் தனியாக ஒரு பிரிவு தொடங்கிடவும், தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை ஒரு ஆண்டுக்கு ரூ.400 வழங்கிடவும் ஆணையிடப்பட்டுள்ளது.

- ✶ தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு வகுப்பறைகள், ஓய்வறைகள் மற்றும் மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடம் கட்டுவதற்கு ரூபாய் ஒரு கோடியே 30 இலட்சமும், நூலகத்திற்குத் தளவாடங்கள் மற்றும் புத்தகங்கள் வாங்க ரூ.24 இலட்சமும், அறை கலன்கள், கணினி மற்றும் இதர இணைப்புகள் வாங்குவதற்கு ரூ.19 இலட்சமும் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு
உயர்கல்வித் துறை அமைச்சர்
டாக்டர் க. பொன்முடி
அவர்கள்

உயர் கல்வித் துறை

அரசுப் பொறியியற் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் குறைப்பு

★ அனைத்துச் சிறுபான்மையல்லாத சுயநிதி பொறியியற் கல்லூரிகளிலும், மாநில இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றி மாணவர்கள் சேர்க்கையை மேற்கொள்ளும் அரசின் சட்டப்படி, சிறுபான்மையல்லாத சுயநிதி பொறியியற் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு 65 விழுக்காடும், நிர்வாக ஒதுக்கீடு 35 விழுக்காடும், சிறுபான்மை சுயநிதி பொறியியற் கல்லூரிகளில் அரசு மற்றும் நிருவாக ஒதுக்கீடு தலா 50 விழுக்காடு எனவும் முறைப்படுத்தப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

★ தொழிற்கல்விப் படிப்புக்கான மாணவர் சேர்க்கைக்கான பொது நுழைவுத் தேர்வினால் அதிக செலவும் மாணவர்களுக்கு மிகுந்த இடர்பாடும் ஏற்பட்டதால், தொழிற்கல்விப் படிப்புக்கான சேர்க்கைக்குரிய பொது நுழைவுத் தேர்வு 2007–2008ஆம் கல்வியாண்டு முதல் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

★ சென்னைப் பல்கலைக்கழகத்தில் “திராவிட இயக்க ஆய்வு மையம்” நிறுவிடவும், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் கல்வித் துறை ஆராய்ச்சி மேற்கொள்ள “கல்வியியல் ஆய்வு மையம்” அமைக்கவும் தலா ரூபாய் ஒரு கோடி ஒப்பளிப்புச் செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

★ அரசுப் பொறியியற் கல்லூரிகளில் நிர்ணயிக்கப்பட்டிருந்த கல்விக்கட்டணம் ரூ.12,550, 2006–2007–ம் கல்வியாண்டு முதல் ரூ.7,550 ஆக இவ்வரசு குறைத்துள்ளது.

* 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுழற்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதால், அரசுக் கல்லூரிகளில் முதலாமாண்டு சேரும் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை மிக அதிகமாக உயரும்.

* உயிரி தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி மற்றும் உயர்கல்வி மையம் ஒன்று அமைத்திட அரசு ஆணையிட்டு, இதற்கென ரூபாய் ஒரு கோடி நிதி வழங்கியுள்ளது.

* அரசினர் பொறியியற் கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்களின் கல்விச் செலவினத்தை ஏற்று, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 2006–07 ஆம் கல்வியாண்டில் தலா ரூ.25,000 வீதம் 85 மாணவர்களுக்கு மொத்தம் ரூ.21.25 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

* பட்டதாரி இல்லாத குடும்பங்களைச் சார்ந்த பொறியியற் கல்வி மாணவர் சேர்க்கைப் பட்டியலில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் 10 இடங்களைப் பெறும் மாணவ, மாணவிகளுக்கு அதிகபட்சமாக ரூ.20,000 வீதம் மொத்தம் 40 மாணவர்களுக்கு ரூ.4.99 இலட்சம் கல்வி உதவித்தொகையாக அரசால் வழங்கப்பட்டுள்ளது.

* அரசுப் பொறியியற் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் பணிபுரிய 237 விரிவுரையாளர்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

* இளம் அறிவியலறிஞர்களுக்கு ஆதரவு ஊதியம் அளித்தல் என்ற திட்டத்தின் கீழ், 4 இளம் விஞ்ஞானிகளுக்கு ரூ.34,000 நிதியுதவி, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் மூலம் வழங்கப்பட்டது.

* 13 அறிவியலறிஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்குத் "தமிழக அறிவியலறிஞர்கள் விருது" என்ற திட்டத்தின் கீழ் ரூ.1.60 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

* வால்பாறை, மேட்டூர், ஒரத்தநாடு மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது

- ★ இந்தக் கல்வியாண்டில் 13 அரசுக் கல்லூரிகளில் சுமார் 80 வகுப்பறைகள் கட்டப்படும்.

- ★ மாநிலக் கல்லூரியின் அனைத்துக் கட்டடங்களிலும் ரூ.3.23 கோடி செலவில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

- ★ கீழ்க்கண்ட அரசினர் பொறியியற் கல்லூரிகளில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்த ரூ.1.64 கோடி தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:-

1) காரைக்குடி அழகப்பச் செட்டியார் பொறியியற் கல்லூரியில் மாணவிகளுக்கான கல்லூரி விடுதிக் கட்டடம்

2) பர்கூர் அரசினர் பொறியியற் கல்லூரியில் புதிய நூலகக் கட்டடம்

3) திருநெல்வேலி பொறியியற் கல்லூரியில் புதிய ஆய்வுக்கூடக் கட்டடம்

4) சேலம் அரசினர் பொறியியற் கல்லூரியில் புதிய ஆய்வுக்கூடக் கட்டடம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம்,
நுழைவுத் தேர்வை அகற்றிட அமைக்கப்பட்ட கல்வியாளர்கள் குழுவின் அறிக்கையை,
அக்குழுவின் தலைவர் டாக்டர் எம்.அனந்தகிருஷ்ணன் அளித்தார் (13.11.2006)

பயணிகள் வசதிக்காக நவீன ரக பேருந்துகள் இயக்கம்

மாண்புமிகு
போக்குவரத்துத்துறை அமைச்சர்
திரு. கே.என்.நேரு
அவர்கள்

போக்குவரத்துத் துறை

★ தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்காக 2,230 புதிய பேருந்துகள் வாங்க ஆணையிடப்பட்டன. அதில், புதியதாக 1,976 பேருந்துகள் வாங்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

★ சென்னை மாநகரில் 50 Yellow Line பேருந்துகள் 15 வழித் தடங்களில் இயக்கப்பட்டன. 176 Blue Line பேருந்துகள் 51 வழித் தடங்களில் இயக்கப்பட்டுள்ளன.

★ மேலும், மாநகர போக்குவரத்துக் கழகத்திற்குப் புதிய 1,000 பேருந்துகள் வாங்குவதற்கு ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ சென்னை மாநகரில் தற்போது 40 கி.மீ. வரை இயக்கப்படும் மாநகர போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இனி 50 கி.மீ. வரை இயக்கப்படும். சென்னை நீங்கலாக, மற்ற நகரங்களில் இயங்கும் பேருந்துகள் 30 கி.மீ. தூரத்திலிருந்து 35 கி.மீ. வரை நீட்டிக்கப்படும்.

★ கடந்த ஆட்சிக் காலத்தில் போனஸ் கோரி போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டக் காலமான 17 நாட்களைப் பணிக்காலமாக அறிவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

★ போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் அலுவலர்களின் பதவி உயர்வில் ஏற்பட்ட தேக்கநிலையை ஆராய்ந்து பதவி உயர்வு வழங்குவதற்கு ஏற்றவாறு பரிந்துரைகளை அரசுக்கு அனுப்ப ஏதுவாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு பரிந்துரைத்ததன் அடிப்படையில் பதவி உயர்வுக்குத் தகுதி

வாய்ந்த நபர்களின் பட்டியல் வெளியிடப்பட்டு, 486 நபர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

- ★ அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் நிருவாக / தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களுக்கு 1.1.2004 முதல் திருத்தியமைக்கப்பட்ட புதிய ஊதிய விகிதத்தை நிர்ணயம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

- ★ அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் பணியாளர்களுக்கு 2005 – 2006 ஆம் ஆண்டிற்கு 8.33% போனஸ் மற்றும் 11.67% கருணைத்தொகை வழங்க அரசாணை வெளியிடப்பட்டது. மேலும், பணியாளர்களுக்குச் செயல்திறன் ஊக்கத்தொகையாக தலா ரூ.625 வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் நவீன ரக Yellow Line மற்றும் Blue Line பேருந்துகளைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்கள். (3.12.2006)

மாண்புமிகு
பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்
திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்
அவர்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

பேருந்துப் பயணச் சலுகை பெறும் மாணவ, மாணவியருக்கும் இலவச மிதிவண்டி வழங்கும் திட்டம் விரிவாக்கம்

★ மைய அரசால் கட்டுப்படுத்தப்படும் மற்றும் நிதியுதவி செய்யப்படும் அனைத்து உயர் கல்வி நிலையங்களிலும், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்குவதை நடைமுறைப்படுத்துவதில் உள்ள இடர்பாடுகளைக் களைய அனைத்து நடவடிக்கைகளையும் மைய அரசு எடுக்கவேண்டுமென இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

★ 2006–2007 ஆம் ஆண்டில் 3,47,014 மாணவ, மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் ரூ.73.74 கோடி செலவில் வழங்கப்பட்டன. 2006–2007 ஆம் ஆண்டு முதல் இலவச பஸ் பாஸ் பெறும் மாணவ, மாணவியருக்கும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

★ தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டுக் கழகம் மூலம் 2006–2007 ஆம் ஆண்டில் இதுவரை ரூ.20 கோடி, 28,202 நபர்களுக்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் 2006–2007 ஆம் ஆண்டில் இதுவரை ரூ.8.21 கோடி, 7,284 நபர்களுக்குக் கடனாக வழங்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர்
மற்றும் இதர வகுப்பைச் சார்ந்த 11, 12ஆம் வகுப்புப் பயிலும் மாணவ–மாணவியர்களுக்கு
இலவச மிதிவண்டிகளை வழங்கினார்கள். (19.1.2007)

சிறுபான்மையினருக்குத் தனி இயக்குநரகம் அமைத்தும்,
கல்வி, வேலைவாய்ப்பில், இடஒதுக்கீடு வழங்கவும், சட்ட நடவடிக்கை எடுத்தமைக்கு
மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு நன்றி கூறும்
சிறுபான்மையினப் பிரதிநிதிகள் (10.4.2007)

மாண்புமிகு
ஊரகத் தொழில்துறை அமைச்சர்
திரு. பொங்கலூர்
நா. பழனிசாமி
அவர்கள்

சிறுதொழில் செய்வோருக்குத் தொழிற்கூடங்கள் மற்றும் தொழில்மனைகள்

சிறுதொழில் துறை

★ 19,201 சிறுதொழில் அலகுகளுக்கு நிரந்தர சிறுதொழில் பதிவுச் சான்றிதழ்களும் மற்றும் தொழில் முனைவோர் ஒப்பந்த மனு எண்களும் வழங்கப்பட்டுள்ளன.

★ பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 21,227 பயனாளிகளுக்கு ரூ.81.25 கோடி கடன் தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. மேலும், 21,080 நபர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

★ 2006 – 07 ஆம் ஆண்டில் ரூ.57.50 கோடி திட்ட முதலீட்டில் வேளாண்மை சார்ந்த 92 திட்ட அலகுகள் 29 வட்டாரங்களில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இதன் வாயிலாக 2,754 கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

★ 340 தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் 2006-07 ஆண்டில் ரூ.41,804.38 இலட்சம் விற்பனை செய்துள்ளன.

★ 2006 மே முதல் 2007 மார்ச் வரை 46 புதிய தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

★ சவ்வரிசித் தொழில் உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்திட சேகோ ஆலைகளை நவீனமயமாக்கும் திட்டத்தில், நவீன இயந்திரங்களை நிறுவிட ஆகும் செலவில் 50 விழுக்காடு தொகை அல்லது அதிகபட்சமாக அலகு ஒன்றுக்கு ரூ. 4 இலட்சம் வரையில் மானியமாக வழங்கிடும் திட்டத்தின் கீழ், மாநில அரசு, சேகோசர்வ் சங்கத்திற்கு ரூ.50 இலட்சம் வழங்கியுள்ளது.

★ பகுதித் திறன் மற்றும் திறன் பெற்ற இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் 20

தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவு சேவை சங்கங்கள் அமைக்க சங்கம் ஒன்றுக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம் அரசு ரூ.20 இலட்சம் வழங்கியுள்ளது.

★ "புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்" கீழ் ஆரம்பிக்கப்பட்ட அலகுகளுக்கு ரூ.6.62 கோடி மானியமாகவும், தொழிலில் பின் தங்கிய வட்டாரங்களில் ஆரம்பிக்கப்பட்ட சிறுதொழில் அலகுகளுக்கு ரூ.7 கோடி குறைந்த அழுத்த மின் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர, தொழிலில் பின் தங்கிய வட்டாரங்களில் ஆரம்பிக்கப்பட்ட சிறு தொழில் அலகுகளுக்கு ரூ.35.16 இலட்சம் மூலதன மானியமாகவும், ரூ.1.26 இலட்சம் மின்னாக்கி மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளன.

★ தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் பல்வேறு தொழிற்பேட்டைகளில் 38 தொழிற் கூடங்களும் மற்றும் 247 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளையும் ஒதுக்கீடு செய்துள்ளது.

★ பாரத மிகு மின் நிறுவனத்தின் (BHEL) துணைத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் பொருட்டு வாழவந்தான் கோட்டையில் (பகுதி - 2) 83.55 ஏக்கர் நிலம் ரூ.125 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது. 57.76 ஏக்கர் பரப்பளவில் 40 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் உருவாக்கப்பட்டு சிறுதொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

★ தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) ரூ.70 லட்சம் (துணிக்கைக்கு முந்தைய நிலையில்) இலாபம் ஈட்டி உள்ளது.

மாண்புமிகு
வருவாய்த்துறை
அமைச்சர்
திரு. ஐ. பெரியசாமி
அவர்கள்

வருவாய் மற்றும் சிறைத்துறை

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்

★ இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக 30,000 வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள், அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று (15.9.2006) அனைத்துச் சாதிகளைச் சேர்ந்த மக்கள் வசிக்கும் பெரியார் சமத்துவபுரங்களில் வாழும் பயனாளிகள், நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து மலைவாழ் குடும்பத்தினர் மற்றும் தென்சென்னை, வடசென்னையில் உள்ள குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளில் உள்ள குடும்பங்களுக்கு 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் சுமார் 10,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 3,97,846 தகுதியுள்ள பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம் கரசங்காலில் அமைந்துள்ள பெரியார் நினைவு சமத்துவபுர வளாகத்தில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். (15.9.2006)

★ நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு அரசு தரிசு நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக தமிழகம் முழுவதும் மேற்கூறிய மூன்று வகையான நிலங்களில் 24,271.14 ஏக்கர் நிலம் தேவையான இடங்களில் பண்படுத்தி/மேம்பாடு செய்யப்பட்டு 23,440 நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. பின்னர் மதுரை மாவட்டத்தில் 918 பயனாளிகளுக்கு 1010.97 ஏக்கர் நிலமும் இரண்டாம் கட்ட விழாவின்போது, 25,805.53 ஏக்கர் நிலமும் தேவையான இடங்களில் பண்படுத்தப்பட்டு / மேம்பாடு செய்யப்பட்டு 26,749 நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. 17.3.2007 அன்று மூன்றாம் கட்ட நிலம் வழங்குதல் விழாவின்போது மூன்று வகை நிலங்களையும் சேர்த்து 26,029.61 ஏக்கர் நிலம் 20,648 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. கடந்த 5 ஆண்டுகளில், அதாவது 2001 முதல் 2006 வரையிலான காலகட்டத்தில், 51,509 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 29,074 ஏக்கர் விவசாய நிலம் வழங்கப்பட்டது. ஆனால் கடந்த 10 மாதங்களில் 71,755 ஏழை நிலமற்ற விவசாயிகளுக்கு 77,117 ஏக்கர் விவசாய நிலம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம், 2006

★ தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம், கடந்த 22.12.2006 முதல் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின் தொடக்க விழா 22.2.2007 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தலைமையில் தஞ்சாவூரில் நடைபெற்றது.

★ 31.3.2007 அன்றைய நிலவரப்படி 63.73 இலட்சம் குடும்ப அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு அதன்மூலம் மொத்தம் 1.28 கோடி உறுப்பினர்கள் இத்திட்டத்தின்கீழ் பதிவு

தந்தை பெரியார் பிறந்த நாளன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தொடங்கி வைத்த ஏழை விவசாயிகளுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டம் (17.9.2006)

செய்யப்பட்டுள்ளனர். உறுப்பினர் சேர்க்கை மற்றும் திட்டத்தின் கீழான பயன்களை வழங்கும் பணி மாநிலம் முழுவதும் (சென்னை நீங்கலாக) தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ இத்திட்டத்தின் கீழ், 2006–2007ஆம் நிதியாண்டில் ரூ.152.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 25,618 பயனாளிகளுக்கு ரூ. 7.63 கோடி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. அதில் ஆதிதிராவிடர் பிரிவைச் சேர்ந்த பயனாளிகள் 7,481 நபர்கள். வழங்கப்பட்ட உதவித்தொகை 2.26 கோடி ரூபாயாகும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம்

★ 2006ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய டெல்டா மாவட்டங்களில் 292.66.5 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த குறுவை நெற்பயிர்கள் பலத்த சேதமடைந்தன. இதற்கென பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயி களுக்கும் எக்டேர் ஒன்றுக்கு ரூ.7,500 வீதம் மொத்தம் ரூ.21,94,988 தொகை நிவாரணமாக வழங்கப்பட்டது.

இயற்கை பேரிடரால் உயிரிழந்த குடும்பங்களுக்கு நிவாரணத்தொகை உயர்த்தி வழங்குதல்

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 30.10.2006 நாளிட்ட அறிவிப்பின்படி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தொகை ரூ.15,000 லிருந்து ரூ.50,000ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

★ இயற்கை பேரிடரின்போது படுகாயமடைந்து கை, கால், கண் போன்ற உறுப்புகளை இழந்தவர்களுக்கு ரூ.10,000 நிவாரணம் வழங்கப்படும்.

★ இயற்கை பேரிடரால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் / நபர்களுக்கும் நிவாரணம் வழங்குவதில் ஏற்படும் காலதாமத்தை தவிர்க்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியர்களே உடனடியாக நிவாரணம் வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

நிலநிர்வாகம்

★ 10 ஆண்டுகளுக்கு மேல் அரசுக்கு தேவைப்படாத நிலங்களில் வீடுகட்டி குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கி வரன்முறைப்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

சுற்றுலாத் தகவல்களை அறிந்துகொள்ள தொடுதிரை கணினி வசதி

மாண்புமிகு
சுற்றுலாத்துறை அமைச்சர்
திரு. என்.சுரேஷ்ராஜன்
அவர்கள்

சுற்றுலா மற்றும் கலாச்சாரத் துறை

★ தேனி மாவட்டம் சுருளி நீர்வீழ்ச்சி மற்றும் சின்ன சுருளி பகுதிகளில் சுற்றுலா நடைபாதை, பூங்கா, குடிதண்ணீர் வசதி, கைப்பிடிச் சுவர்கள் போன்ற வசதிகள் அமைக்க ரூ.30.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ பாரம்பரிய சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் பணியில், முதற்கட்டமாக தஞ்சாவூர் தலம் தெரிவு செய்யப்பட்டு, ரூ.427.46 இலட்சம் திட்ட மதிப்பீட்டை அங்கீகரித்து ரூ.341.96 இலட்சம் முதல் தவணை நிதி வழங்கப்பட்டுள்ளது.

★ கன்னியாகுமரி மேம்பாட்டுப்பணிகளுக்கு மொத்தத் திட்ட மதிப்பீடு ரூ.258.82 இலட்சத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு முதல் தவணையாக ரூ.206.81 இலட்சம் நிதி வழங்கப் பட்டுள்ளது.

★ மதுரை மேம்பாட்டுப்பணிகளுக்காக மொத்தத் திட்ட மதிப்பீடு ரூ.478.03 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, முதல் தவணை நிதி ரூ.382.42 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

★ திருச்சிராப்பள்ளி மாவட்டம் புளியஞ்சோலை சுற்றுலாத் தல மேம்பாட்டிற்கான மொத்தத் திட்ட மதிப்பீடு ரூ.97.02 இலட்சம் அங்கீகரிக்கப்பட்டு, முதல் தவணைத் தொகை ரூ.77.62 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

★ சென்னை– காஞ்சிபுரம்– திருக்கழுக்குன்றம்– மாமல்லபுரம் சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாடுத்திட்ட மதிப்பீடு ரூ.452.78 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, ரூ.362.22 இலட்சம் முதல் தவணையாக வழங்கப்பட்டுள்ளது.

★ அதிக கவனம் செலுத்தி, ஒப்புதல் அளிக்கப்பட்ட கீழ்க்காணும் சுற்றுலா தல மேம்பாட்டிற்கு உரிய பணிகள் விரைவில் நடந்தேறி முடிந்திட உரிய நிதி ஒதுக்கீடு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

வ.எண்	சுற்றுலாத்தலம்	ஒப்புதல் திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)	நிதி ஒப்பளிப்பு (ரூபாய் இலட்சத்தில்)
1.	இராமேஸ்வரம்	426.42	344.10
2.	கொடைக்கானல்	470.19	376.10
3.	இராமேஸ்வரம் விவேகானந்தா சுற்றுலா மேம்பாடு	84.12	84.12
4.	முட்டுக்காடு படகு குழாம்	67.00	35.60
5.	அறுபடை வீடுகள்	639.17	632.17
6.	ஏற்காடு ஏரி	—	6.50
7.	சோழநாட்டுத் திருப்பதிகள்	562.00	—
8.	தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம், தாராசுரம் மற்றும் மாமல்லபுரம் பகுதிகளில் ஒலிநாடா மூலம் சுற்றுலா தகவல் வழங்கும் பணி	148.50	134.75

சென்னையில் வால்வோ சுற்றுலா பயணிகள் பேருந்தை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.என். சுரேஷ்ராஜன் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். (23.12.2006)

★ கீழ்க்காணும் சுற்றுலாத் தலங்கள் மேம்பாட்டுப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

வ.எண்	சுற்றுலாத் தலம்	ஒப்புதல் வழங்கப்பட்ட செலவினம் (ரூபாய் இலட்சத்தில்)	நிதி ஒப்பளிப்பு (ரூபாய் இலட்சத்தில்)
1.	கட்டபொம்மன் நினைவுக்கோட்டை மற்றும் நுழைவு வாயில் மேம்பாடு	8.49	8.49
2.	காஞ்சிபுரம் மாவட்டம் கொட்டிவாக்கம் கடற்கரை	17.05	17.05
3.	சாத்தனூர் அணை மற்றும் ஜவ்வாது மலை	108.00	54.00
4.	தஞ்சாவூர் மாரியம்மன் ஆலயம்	73.70	25.00
5.	ஈரோடு மாவட்டம் கொடிவாரி அணை	25.00	12.50
6.	நவக்கிரகத் தலங்கள் மேம்பாடு	50.00	50.00
7.	பூவரசன்குப்பம் கோயில் மேம்பாடு	17.00	8.50
8.	கடலூர்–ஜெயங்கொண்டபட்டினம்	30.00	15.00
9.	கரூர்–பொன்னை ஆறு	25.00	12.50
10.	வண்டலூர் வன உயிரினக்காப்பகம்	23.00	23.00
11.	ஏலகிரி மலை மேம்பாடு	92.00	46.00
12.	விழுப்புரம்–மேல்மலையனூர் மேம்பாடு	62.37	31.19
13.	தஞ்சை மாவட்டம் மனோரா மேம்பாடு	31.95	31.95
14.	திருவண்ணாமலை–அய்யனார் கோவில்	35.00	15.00
15.	மதுரை சுற்றுச்சூழல் பேணும் மேம்பாடு	35.35	17.67
16.	தஞ்சாவூர்–திருக்கருகாவூர்	23.50	11.75
17.	திருவாரூர்–கேக்கரை (ம) குருவி இராமேஸ்வரம்	77.35	77.35
18.	திருவாரூர்–திருப்பாம்புரம்	18.80	9.40
19.	நாகப்பட்டின மாவட்ட திருக்கோவில்கள்	20.15	10.15
20.	தஞ்சை மாவட்ட திருக்கோவில்கள்	52.65	26.32
21.	விழுப்புரம் மாவட்டம் திருவக்கரை	47.15	23.50

- தமிழக சுற்றுலாத்தலங்களின் கவின்மிகு காட்சிகளைத் தொகுத்து 20 நிமிட சுற்றுலா குறும்படம் டி.வி.டி குறுந்தகட்டிலும், சி.டி குறுந்தகட்டிலும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. வெளிமாநிலத்திலும், வெளிநாட்டு சுற்றுலா வர்த்தக மாநாடு மற்றும் கூட்டங்களில் காண்பிக்கப்பட்டு வருகிறது.

- தமிழகத்திலுள்ள பாரம்பரியத் தலங்களான மாமல்லபுரம், தஞ்சாவூர், தாராசுரம், கங்கைகொண்ட சோழபுரம் மற்றும் நீலகிரி மலை ரயில் போன்ற தலங்களை உயர்ரக வண்ணப்படங்களைக் கொண்ட "காபி டே புக்" எனும் உயர்ரக தகவல் புத்தகம் வெளியிடப்பட்டு மிகச்சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

- தமிழகத்தின் அனைத்துத் தகவல்களை உள்ளடக்கி உரிய வண்ணப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகளையும் தொகுத்து "சி.டி–ராம்" என அழைக்கப்படும் தகவல் குறுந்தகடு வெளியிடப் பட்டுள்ளது.

- தமிழகத்திற்கு ரயில் மற்றும் விமானம் மூலம் வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் வந்தவுடன் தகவல்கள் அறிந்திட, தொடுதிரை கணினிகள் கீழ்க்கண்ட தலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
  - சென்னை (ரயில் நிலையம், விமான நிலையம்)
  - மாமல்லபுரம்
  - திருச்சிராப்பள்ளி
  - மதுரை ரயில் நிலையம்
  - கொடைக்கானல்
  - கன்னியாகுமரி
  - இராமேஸ்வரம்

- தமிழகத்தில் பட்டப்படிப்புப் படித்து வேலையின்றி இருக்கும் இளைஞர்களுக்குச் சுற்றுலா வழிகாட்டிப்பயிற்சி அளித்து அவர்களை சுற்றுலாத்தலங்களில் சுற்றுலா வழிகாட்டிகளாக நியமிக்க உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை பெறப்பட்ட 500க்கும் மேற்பட்ட விண்ணப்பங்களைப் பரிசீலித்து முதற்கட்டமாக 200 இளைஞர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

- மதுரை, இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி தலங்களுக்குக் கையேடுகள் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் அச்சடித்து வெளியிடப்பட்டுள்ளது.

- சென்னை மற்றும் பழவேற்காடு தலங்களுக்கு ஆங்கிலத்தில் கையேடுகள் அச்சடிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

★ தமிழக சட்டப்பேரவையில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததன்படி, சுற்றுலாத்துறையின் நடவடிக்கைகள் மற்றும் சுற்றுலா செய்திகள் உள்ளடக்கிய "நியூஸ் லெட்டர்" எனும் ஆங்கில சுற்றுலா காலாண்டுத் தகவல் பத்திரிகை வெளியிடப்பட்டுள்ளது.

★ தமிழகத்தின் சுற்றுலாத் தலங்களின் கவின்மிகு காட்சிகளைத் தொகுத்து அவற்றை வண்ணங்களில் அச்சிட்டு 12 இதழ்களைக் கொண்ட 2007ஆம் ஆண்டு காலண்டர் வெளியிடப்பெற்று வரவேற்பைப் பெற்றுள்ளது.

★ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளை ஈர்த்திடும் வகையில் நாட்டின் மிகவும் பிரசித்திப் பெற்ற பத்திரிகைகள், வார மற்றும் மாதாந்திர பத்திரிகை வெளியீடுகள், சென்னைக்கு வரும் விமானங்களில் படிக்க வைக்கப்படும் உயர்ரக சுற்றுலா வெளியீடுகளில் தமிழகத்தின் வளங்களைச் சொல்லிடும் வகையில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

★ தொலைக்காட்சி மூலம் சுற்றுலா மகிழ்விடங்களைக் காட்டிடும் வண்ணப்பட விளம்பரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சுற்றுலா காவலர்கள்

தமிழகத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்குப் பாதுகாப்பு அளித்திடும் வகையில் கீழ்க்கண்ட சுற்றுலாத்தலங்களில் சுற்றுலா காவலர்கள் எனத் தனிப்பிரிவு அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

- மாமல்லபுரம்
- உதகமண்டலம்
- கொடைக்கானல்
- மதுரை
- கன்னியாகுமரி

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

★ ரூ.62 இலட்சம் செலவில் ஒரு புதிய வால்வோ பேருந்து வாங்கப்பட்டது. ரூ.171 லட்சம் செலவில் கூடுதலாகக் குளிர்ப் பதன வசதி மற்றும் குளிர்ப் பதன வசதியில்லா 10 பேருந்துகள் வாங்கப்பட்டுப் பயன்பாட்டிலுள்ளது.

- ★ சென்னை அரசு அருங்காட்சியகத்தில் மானிடவியல் கூடங்கள் மற்றும் கட்டடம் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகளுக்காக ரூ.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதில் ரூ.40 இலட்சம் பொதுப்பணித்துறை (கட்டடப் பணிகளுக்கும்) ரூ.20 இலட்சம் மின் பணிகளுக்கும் ஒப்பளிக்கப்பட்டு மீதம் உள்ள பணிகள் பொதுப்பணித்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுத் துரிதமாக நடைபெற்று வருகிறது.

- ★ சென்னை அரசு அருங்காட்சியகம் பெல்ஜியத்தில் புரூசெல்ஸ் மற்றும் ஐக்கிய நாடுகள், இலண்டன், இராயல் ஆர்ட் அகாடமி ஆகிய இரண்டு பன்னாட்டுக் கண்காட்சிகளில் பங்கேற்று காட்சிப் பொருட்களைக் கடனாக அளித்துத் திரும்பப் பெற்றது.



கன்னியாகுமரி

இயற்கை, இருத்தல் மற்றும் அறிவின் சங்கமம்

மாண்புமிகு
செய்தித்துறை அமைச்சர்
திரு. **பரிதி இளம்வழுதி**
அவர்கள்

செய்தி-மக்கள் தொடர்புத் துறை

பத்திரிகையாளர் நலன்

★ பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம் மாற்றியமைக்கப்பட்டு, 20 ஆண்டுகள் பணிபுரிந்து, பணியாற்றிக்கொண்டிருக்கும் பொழுது இறந்து விடுவார்களேயானால், அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ.2 இலட்சம் என்றும், 15 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார் களேயானால் ரூ.1.50 இலட்சம் என்றும், 10 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ரூபாய் ஒரு இலட்சம் என்றும், 5 ஆண்டுகள் பணிபுரிந்திருப்பார்களேயானால் ரூ.50 ஆயிரம் என்றும் பத்திரிகையாளர் குடும்பநல நிதியுதவி வழங்கும் புதுத் திட்டம் 2006–2007ஆம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

★ பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.4000 ஆகவும், பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.2000 ஆகவும் 2006–2007ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

★ சென்னையில் 609 பத்திரிகையாளர்களுக்கும், மாவட்டங்களில் 75 பத்திரிகையாளர்களுக்கும் செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ சென்னை கடற்கரையில் “தமிழர் பண்பாட்டுச் சின்னம்” கண்ணகி சிலை மீண்டும் நிறுவப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் சென்னை – மெரினா கடற்கரை, காமராசர் சாலையில் “தமிழர் பண்பாட்டுச் சின்னம்” கண்ணகி சிலையினை மீண்டும் திறந்து வைத்தார்கள் (3.6.2006)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை கடற்கரை காமராசர் சாலையில் அமைக்கப்பட்டுள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலையினைத் திறந்து வைத்தார்கள். (21.07.2006)

★ சென்னை, காமராசர் சாலையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் முழு உருவச் சிலை அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

நினைவில் நிற்போருக்கு நினைவில் நிற்கும் பணிகள்

★ சென்னை திருமலை சாலையிலுள்ள காமராசர் இல்லம், காஞ்சிபுரம் மாவட்டம், சின்ன காஞ்சிபுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், கிருஷ்ணகிரி மாவட்டம் தொரப்பள்ளியில் உள்ள மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம், நாமக்கல்லில் உள்ள கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம், பட்டுக்கோட்டையில் உள்ள பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம், திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம், நெற்கட்டும்செவல் கிராமத்தில் உள்ள மாவீரன் பூலித்தேவன் சிலை, தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் உள்ள வ.உ.சி. இல்லம், தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் மணிமண்டபம், தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் இல்லம், தூத்துக்குடி மாவட்டம் கட்டாரங் குளத்தில் உள்ள வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம், தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுப் பூங்கா, திருச்சிராப்பள்ளியில் உள்ள வ.வே.சுப்ரமணியம் நினைவகம், கன்னியாகுமரியில் உள்ள காந்தி நினைவு மண்டபம், கன்னியாகுமரியில் உள்ள பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபம், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் உள்ள பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபம், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில், இடலாக்குடி, கோட்டாரில் உள்ள சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நினைவு மண்டபம், ஈரோட்டில் உள்ள பெரியார்–அண்ணா நினைவகம், மதுரை மாவட்டம்,

தும்பைப்பட்டியில் உள்ள தியாகசீலர் கக்கன் மணிமண்டபம், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள மருதுபாண்டியர் நினைவு மண்டபம், குன்றக்குடியில் உள்ள தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம் மற்றும் காரைக்குடியில் உள்ள கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம் ஆகிய நினைவுச் சின்னங்கள் சீரமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன.

★ கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு இணைந்து 31.10.2006 அன்று 50 ஆண்டுகள் நிறைவுபெற்றதையொட்டி, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு சார்பில் பொன்விழா கொண்டாடப்பட்டது.

★ புத்தர் மகாபரிநிர்வாணம் அடைந்து 2550 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி, நாடு முழுவதும் ஓராண்டு காலம் விழா நடத்துவதற்காக மைய அரசால் மாண்புமிகு இந்தியப் பிரதமர் தலைமையில் தேசிய அளவில் தேசியக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதுபோன்று, தமிழ்நாட்டில் ஆண்டு முழுவதும் விழா கொண்டாட மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

★ சென்னையில் உள்ள எம்.ஜி.ஆர் நினைவிடத்தில் எம்.ஜி.ஆர் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

★ தமிழரசு இதழ் தற்போது அரசின் இணையதளத்திலும் (www.tn.gov.in) உடனுக்குடன் வெளியிடப்பட்டு வருகிறது.

★ தமிழரசு அச்சகத்திற்கு டிப்ளமாட் தானியங்கித் தாள் மடிக்கும் இயந்திரம், பிரிண்டிங் டவுன் பிரேம் மற்றும் "பிளேட் பிராசசர்", மெமரி இமேஜ்மேக்கர் மற்றும் "மெமரி பிராசசர் ரேப்பிட் ஆக்சஸ்", தானியங்கி நவீன "லேமினேஷன்" இயந்திரம் ஆகிய நவீன கருவிகள் ரூ.34.63 இலட்சம் செலவில் வாங்கி நிறுவப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

★ ரூ.36.00 இலட்சம் செலவில் எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் உள்ள மறுஒலிப்பதிவு அரங்கத்தில் ஒருமுகப்படுத்தப்பட்ட குளிர்சாதன வசதியும், இருக்கை வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

★ ரூ.49.50 இலட்சம் செலவில் எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் "டிடிஎஸ்–டால்பி டிஜிட்டல் ரெக்கார்டிங் கருவி" என்கோடர், கலவை இயந்திரம் மற்றும் இதர நவீன கருவிகள் வாங்கி நிறுவப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

★ ரூ.17.93 இலட்சம் செலவில் "பைனல் கட் புரோ–5" என்ற நவீன கருவி தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு வாங்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளது.

பல்துறைப் பணி விளக்க முகாம்கள்

★ அனைத்து மாவட்டங்களிலும், பல்துறை பணி விளக்க முகாம்களும் கண்காட்சிகளும் நடத்தப்பட்டன.

★ அரசின் திட்டங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் பணிகளைப் பற்றிய புகைப்படம் எடுத்து உடனுக்குடன் மின்னஞ்சல் வழியாக அனைத்து நாளிதழ்களுக்கும் அனுப்பும் பணியை மேற்கொள்ள ஏதுவாக அனைத்து மாவட்டச் செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் டிஜிட்டல் நிழற்படக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பல்துறை பணி விளக்க முகாம்



மாண்புமிகு
செய்தித்துறை அமைச்சர்
திரு. பரிதி இளம்வழுதி
அவர்கள்

நகர்ப்புற வளர்ச்சித்துறை

* சென்னையில், திருவான்மியூருக்கு தெற்கேவுள்ள கடலோரப் பகுதியில் கடல்அலை வந்து செல்லும் பகுதிகளிலிருந்து 500 மீட்டருக்கு அப்பால், குடியிருப்புகள், வர்த்தகக் கட்டடங்கள் கட்ட விதிக்கப்பட்டிருந்த தடையை அரசு விலக்கிக் கொண்டு அங்கு கட்டடங்கள் கட்டிக் கொள்ள சில நிபந்தனைகளுடன் அனுமதி அளித்துள்ளது.

* புராதன நகரங்களுக்கு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், நாகூர், கங்கைகொண்ட சோழபுரம் மற்றும் பிச்சாவரம் ஆகிய நகரங்களில் திட்டங்களைச் செயல்படுத்த ஒவ்வொரு நகருக்கும் ரூ.50 இலட்சம் வீதம் வழங்கப்பட்டது. பவானி நகருக்கு ரூ.50 இலட்சமும், சித்தன்னவாசல் நகருக்கு ரூ.42.25 இலட்சமும் மானியம் விடுவிக்கப்பட்டது. இடைக்காட்டூர் புராதன நகருக்கு 2ஆவது தவணைத் தொகையாக ரூ. 8 இலட்சமும், 5 நவதிருப்பதி கோவில்களில் திட்டங்கள் செயல்படுத்த தூத்துக்குடி மாவட்ட ஆட்சியருக்கு ரூ.50 இலட்சமும் வழங்கப்பட்டது.

* போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த 75 சதவிகித மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் விழுப்புரம் நகருக்கு ஒதுக்கப்பட்ட மொத்தம் ரூ.25 இலட்சம் மானியத் தொகையில் முதல் தவணை ரூ.10 இலட்சம் மற்றும் இரண்டாவது தவணை ரூ.15 இலட்சம் விடுவிக்கப் பட்டுள்ளது. தஞ்சாவூர் நகருக்கு ஒதுக்கப்பட்ட மொத்தம் ரூ.25 இலட்சம் மானியத் தொகையில் முதற்கட்டமாக ரூ.5 இலட்சம் தற்சமயம் விடுவிக்கப்பட்டுள்ளது. தருமபுரி நகருக்கு ஒதுக்கப்பட்ட மொத்தம் ரூ.18.75 இலட்சம் மானியத் தொகையில் முதற்கட்டமாக ரூ.3.75 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் நகருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மொத்த மானியத் தொகை ரூ.25 இலட்சத்தில் முதற்கட்டமாக ரூ.5 இலட்சம் விடுவிக்கப் பட்டுள்ளது. புதுக்கோட்டை, திருமங்கலம், கிருஷ்ணகிரி, தேனி, அல்லி நகரம் மற்றும் மேலூர் ஆகியவற்றிற்கு முதல் தவணைத் தொகை முறையே ரூ.3.75 இலட்சம், ரூ.5 இலட்சம், ரூ.4 இலட்சம், ரூ.3.75 இலட்சம் மற்றும்ரூ.3.75 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

* பூங்காக்களை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு, ரூ.1.25 இலட்சம் பவானி மற்றும் தேனி அல்லி நகரம் ஆகிய ஒவ்வொரு நகராட்சிக்கும் 50 சதவிகிதம் மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

துவக்க முதலீட்டுத் திட்டம்

* உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தூத்துக்குடி நகருக்கு ரூ.20 இலட்சமும் காரைக்குடி நகருக்கு 50 சதவிகிதம் மானியத் தொகையில் ரூ.10.46 இலட்சமும் விடுவிக்கப் பட்டுள்ளது.

சுனாமி மனைப்பிரிவு ஒப்புதல்

* சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் குடியிருப்புக்கான மனைப்பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்க கடந்த அரசு நடவடிக்கை எடுக்காத நிலையில் இவ்வரசு பதவியேற்றவுடன் இம்மாதிரியான மனைப் பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்க ஆணையிடப்பட்டது. அதன்படி 7 கடலோர மாவட்டங்களில் 165 மனைப்பிரிவுகளுக்கு விதிகள் விலக்கு அளிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

மின்னணு ஆளுகை முறையைப் புகுத்துதல்

* பொதுமக்கள் தங்கள் வரைபட ஒப்புதலை குறுகிய காலத்தில் அதிக சிரமமின்றிப் பெற ஏதுவாக மின்னணு ஆளுகை முறையை துறையின் நடவடிக்கைகளில் திருவாளர்கள் எல்காட் உதவியுடன் செயல்படுத்த ஏற்கெனவே அரசு ரூ.20 இலட்சம் வழங்கியுள்ளது. மேலும் பகுதி II திட்டத்தின் (2006 – 2007)ன் கீழ் ரூ.10 இலட்சம் ஒதுக்கப்பட்டு ஆக மொத்தம் ரூ.30 இலட்சம் எல்காட் நிறுவனத்திற்கு முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு
புள்ளியியல் துறை
அமைச்சர்
திரு.கோ.சி. மணி
அவர்கள்

ஏழை எளிய மக்களை வாழவைக்க ஒரு கிலோ அரிசி ரூ.2க்கு வழங்கல்

கூட்டுறவு மற்றும் உணவுத் துறை

★ குடும்ப அட்டை பெற்றுள்ள அனைத்து குடும்பத்தினருக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.2/– என்ற விலையில் தரமான அரிசி பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சென்னையில் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள் (3.6.2006)

★ குடும்ப அட்டைகள் இல்லாத 2,19,050 நபர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன.

★ 2006 – 2007 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக மூன்று இலட்சம் பயனாளிகளுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் அடுப்பு வழங்க ஆணையிடப்பட்டது. 14.1.2007 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் 34,500 பயனாளிகளுக்கு இலவச இணைப்புடன் எரிவாயு மற்றும் எரிவாயு அடுப்பு வழங்கப்பட்டன.



மாண்புமிகு உணவு மற்றும்
கூட்டுறவுத் துறை அமைச்சர்
திரு. எ.வ.வேலு
அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் இலவச எரிவாயு இணைப்பு–அடுப்பு ஆகியவற்றை வழங்கினார் (17.3.2007)

- ★ விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், பருப்பு வகைகள் மற்றும் பாமாயில் ஆகியவை 14.4.2007 முதல் குறைந்த விலையில் நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படுகின்றன.
- ★ கூட்டுறவு வங்கிகளில் 31.3.2006ஆம் தேதிய நிலவரப்படி நிலுவையிலிருந்த விவசாயக் கடன் மற்றும் வட்டித் தொகையான ரூ.6,866 கோடி தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால் 22,59,491 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
- ★ 31.3.2007 வரை விவசாய நோக்கத்திற்குக் கூட்டுறவு வங்கிகளில் அடகு வைக்கப்பட்ட நகைகள் 1,81,650 விவசாயிகளுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளன.

★ 31.3.2007 வரை கூட்டுறவு வங்கிகளில் அடமானம் வைக்கப்பட்ட பத்திரங்கள் 1,98,812 விவசாயிகளுக்குத் திருப்பி வழங்கப்பட்டுள்ளன.

★ கூட்டுறவு வங்கிகள், பயிர்க் கடனாக மட்டும் 31.3.2007 வரை 6,31,283 விவசாயிகளுக்கு ரூ.1,250.62 கோடி வழங்கியுள்ளன.

★ 1.4.2006 முதல் பயிர்க்கடனுக்கான வட்டி 9 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. பண்ணைச்சாராக் கடன் பெற்று தற்போது நிலுவையிலுள்ள கடன்களுக்கான வட்டி விகிதம் 18 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

★ பண்ணைச் சாராக் கடன் வட்டி விகிதம் 18 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

★ அத்தியாவசியப் பொருட்களை பொதுமக்கள் பெறுவதில் ஏற்படும் சிரமத்தை உணர்ந்து பகுதி நேரக் கடைகள் அமைப்பதற்கு இரண்டு நியாய விலைக் கடைகளுக்கு இடையே உள்ள தூரம் குறைந்தது 2 கிலோ மீட்டர் இருக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக குறைந்தது 1.5 கிலோ மீட்டர் எனவும், புதிதாக தோற்றுவிக்கப்படும் பகுதிநேரக் கடைகளில் குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக குறைந்தது 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என தளர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

★ முறையற்ற வகையில் பணியமர்த்தப்பட்டவர்களில் இதுவரை 24,469 பணியாளர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 229 பணியாளர்கள் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

★ 2,395 நியாய விலைக் கடைகளுக்கு நவீன எடைபோடும் இயந்திரங்கள் வாங்க ரூ.100 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு
வீட்டுவசதி மற்றும்
குடிசை மாற்று வாரியத்துறை அமைச்சர்
திரு. சுப.தங்கவேலன் அவர்கள்

வீட்டுவசதித்துறை மற்றும் குடிசை மாற்று வாரியம்

சுனாமி பாதித்த மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள்

- ✶ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 30 சுயநிதி மற்றும் புறநகர் திட்டங்களை ரூ.68.07 கோடி மதிப்பீட்டில் (300 அடுக்குமாடிக் குடியிருப்புகள், 508 தனி வீடுகள், 783 மனைகள்) செயல்படுத்தி உள்ளது.
- ✶ கடந்த காலத்தில் வழங்கப்படாமல் இருந்த விற்பனைப் பத்திரங்கள் 18,632 ஒதுக்கீடுதாரர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன.
- ✶ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் ரூ.378 கோடி மதிப்பிலான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டுள்ளது.
- ✶ 2,933 மனைகள், 602 குடியிருப்புகள் மற்றும் 75 வணிக மனைகள் ரூ.97.50 கோடிக்கு விற்கப்பட்டது.
- ✶ சென்னை நகரில் சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடசென்னைப் பகுதியில் 1,392 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.20.88 கோடி செலவிலும், இதர குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்காக1,560 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.19.62 கோடி செலவிலும் அமைத்து கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- ✶ வடசென்னைப் பகுதியில் சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மற்றும் எண்ணூர் விரைவு சாலை விரிவாக்கப் பணிகளுக்கான இடங்களில் வாழும் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்காக 1,824 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைப்பதற்கான திட்டப் பணிகள் ரூ.31.20 கோடி செலவில் தொடங்கப் பட்டுள்ளன.
- ✶ சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு வடசென்னைப் பகுதியில் 3,584 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.71.68 கோடி செலவில் அமைக்க 13.69 ஹெக்டேர் நிலம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நிலக்கிரயமின்றி வழங்கப்பட்டுள்ளது.

* தென்சென்னைப் பகுதியில் சுனாமி ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மறு குடியமர்வு செய்ய சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 5,166 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.103.32 கோடி செலவில் அமைக்க 17.81 எக்டேர் அரசு நிலம் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நிலக்கிரயமின்றி வழங்கப்பட்டுள்ளது.

* சுனாமி ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வியல் ஆதாரங்களை மேம்படுத்த ஆசிய வங்கி உதவியுடன், சுயஉதவிக் குழுக்கள் மூலம் அவர்களின் வாழ்வு ஆதாரங்களை மேம்படுத்த வேலைவாய்ப்புப் பயிற்சிகள் மற்றும் இதர பணிகள் ரூ.2.05 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* பன்னிரெண்டாவது நிதிக்குழுவின் சிறப்பு மானியத் திட்டத்தின் கீழ் சென்னை, மதுரை, சேலம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் இதர சிறு நகரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு, 6031 வீடுகள் ரூ.71.87 கோடி செலவில் அமைக்க ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

* மேலும் இத்திட்டத்தின் மூலம் நகரக் குடிசைப் பகுதிகளில் வாழும் 8,785 குடும்பங்களுக்கு ரூ.1.75 கோடி செலவில் அடிப்படை வசதிகளான சாலைகள், மழைநீர் கால்வாய், தெரு மின்விளக்குகள், கழிப்பறை வசதிகள் போன்ற பணிகள் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

* சென்னை மற்றும் இதர நகரங்களில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான சிறப்பு பழுது பார்ப்புப் பணிகள் ரூ.10 கோடி செலவில் முன்னேற்றத்தில் உள்ளன.

* நகர்ப்பகுதிகளில் உள்ள குடிசைப்பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளான சாலைகள், கான்கிரீட் நடைபாதைகள், தெரு மின் விளக்கு, குடிநீர் வசதி, கழிப்பறை வசதிகள் போன்ற மேம்பாட்டுப் பணிகள் 20,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.1.00 கோடி செலவில் அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மக்கள் நலன்காக்க ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்வு

மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்
அவர்கள்

மக்கள் நல்வாழ்வுத் துறை

★ வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ் ரூ.18.31 கோடி செலவில் நடப்பாண்டிலும், அடுத்த ஆண்டிலும் 9,000 முகாம்கள் நடத்தப்படவுள்ளன. இதுவரை 1,559 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

★ டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு திட்டம் மீண்டும் தொடங்கப்பட்டு, 2,36,823 கர்ப்பிணிப் பெண்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின் கீழ் கர்ப்பிணிப் பெண்களுக்கு மகப்பேறுக்கு முந்திய மற்றும் பிந்திய காலங்களில் ரூ.1,000 வீதம் ரூ.6,000 வழங்கப்படுகிறது.

★ நோயாளிகளுக்கு வலி ஏற்படாத வகையில் அனைத்து உடல் உறுப்புகளின் நோய் பாதிப்பை 20 வினாடிகளில் மிகத் துல்லியமாக அறிய சென்னை அரசுப் பொது மருத்துவமனையில் அதிநவீன 64 கூறுகள் சி.டி.ஸ்கேனர் (C.T.Scan) கருவி ஒன்று நிறுவிட ரூ.5.5 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆறு மருத்துவக்கல்வி மருத்துவமனைகளில் ரூ.28 கோடி செலவில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் (MRI Scan) நிறுவிட ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ 75 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ரூ.31 கோடி செலவில், 30 படுக்கைகள் கொண்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

★ விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ 385 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் பேறுகால இளஞ்சிசு கவனிப்பு மையங்களாக மேம்படுத்தப்பட்டு ரூ.54.97 கோடிக்கு மருந்து, கட்டடம், உயிர் காக்கும் நவீனக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- 385 முதன்மை ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு, செமி ஆட்டோ அனலைஸர் (Semi - Auto Analyser with Reagent) ரூ.7.13 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.
- 1,529 மருத்துவக் காலியிடங்கள் தேர்வாணையம் மூலமாக நிரப்பப்பட்டுள்ளன. 678 மருத்துவர்கள் / சிறப்பு மருத்துவர்கள் வேலைவாய்ப்பகம் மூலம் பணி நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.
- அல்ட்ரா சோனாகிராம் கருவிகளின் சேவை சாதாரண ஏழை எளிய மக்களுக்கும் கிடைத்திட ஏதுவாக ரூ.7.11 கோடி செலவில் 237 அல்ட்ரா சோனாகிராம் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.
- மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள தாய் சேய் நலப்பிரிவுகளின் தரம் உயர்த்திட தலா ரூ.50 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.7 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- அவசரக் காலங்களில் பிரசவம் பார்ப்பதற்கு தகவல் பரிமாற்ற வசதியாக 8,683 கிராமச் சுகாதார செவிலியர்களுக்கு ரூ.2.6 கோடி செலவில் செல்போன்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் மு.கருணாநிதி அவர்களால்
தொடங்கி வைக்கப்பட்ட
"வருமுன் காப்போம் திட்டம்" (30.12.2006)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால்
சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் திறந்து வைக்கப்பட்ட
இரைப்பை, குடல் மற்றும் கல்லீரல் பிரிவுகளுக்கு
புதிய கட்டடம் (15.4.2007)

மாண்புமிகு
தொழிலாளர் நலத்துறை
அமைச்சர்
திரு. **தா.மோ.அன்பரசன்**
அவர்கள்

வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை

★ வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஐந்து வருடத்திற்கு மேல் காத்திருக்கும் இளைஞர்களுக்கு, மூன்றாண்டு காலத்திற்கு மாதம் ஒன்றிற்கு

1) எஸ்.எஸ்.எல்.சி. தேறியவர்களுக்கு ரூ.150/–

2) மேனிலைக் கல்வி தேறியவர்களுக்கு ரூ.200/–

3) பட்டதாரிகள் மற்றும் முதுகலைப் பட்டதாரிகளுக்கு ரூ.300/– வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11.11.2006 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் 3,18,089 இளைஞர்கள் பயன் பெற்றுள்ளனர். இதற்காக, ரூ.35,48,19,000 செலவிடப் பட்டுள்ளது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தொடங்கிவைத்த வேலைவாய்ப்பற்ற இளைஞர் உதவித்தொகை வழங்கும் திட்டம். (11.11.2006)

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர் நல வாரியம்

★ அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தும் வகையில் கீழ்க்காணும் தொழில்களுக்குத் தனித்தனியே நல வாரியங்கள் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

1) தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் நல வாரியம்.
2) தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம்.
3) தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம்.
4) தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம்.
5) தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம்.
6) தமிழ்நாடு முடிதிருத்துவோர் வாரியம்
7) தமிழ்நாடு கைத்தறி மற்றும் பட்டு நெசவுத் தொழிலாளர்கள் நல வாரியம்.
8) தமிழ்நாடு காலணி, தோல்பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம்.
9) தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம்.
10) தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம்.
11) தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம்.
12) தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம்

ஏற்கெனவே உள்ள தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்துடன், மேற்குறிப்பிட்ட 12 நல வாரியங்களும் தற்சமயம் செயல்பட்டு வருகின்றன. இவ்வாரியங்களில், கடந்த ஓராண்டில் 5,29,626 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். 93,159 பயனாளி களுக்கு ரூ.19,49,82,648 உதவித்தொகை வழங்கப் பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், கடந்த ஓராண்டில் 3,30,048 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். 40,751 பயனாளிகளுக்கு ரூ.13,11,94,906 உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்
திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்,
செங்கல்பட்டில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு
உதவித்தொகை வழங்கினார்கள். (25.2.2007)

மாண்புமிகு
இந்து சமயம் மற்றும்
அறநிலையத்துறை அமைச்சர்
திரு. **கே ஆர்.பெரியகருப்பன்**
அவர்கள்

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை

கிராமக்கோவில் பூசாரிகளுக்கு நலவாரியம்

- ★ இந்துக்களில் தகுதியும், பயிற்சியும் உள்ள அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதற்கு ஏதுவாக 6 இடங்களில் சைவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும், 5 இடங்களில் வைணவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும் திருச்சிராப்பள்ளியில் ஒரு பயிற்சி நிலையமும் அமைக்க ஆணையிடப்பட்டது.
- ★ கிராமக் கோயில் பூசாரிகள் நலனுக்காகத் தனி வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
- ★ ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதியிலுள்ள, இத்துறைக் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களைச் சீரமைக்க திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் 2,000 திருக்கோயில்களுக்கு ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.
- ★ நாள்தோறும் ஒரு கால பூஜை கூட செய்ய வசதியில்லாத திருக்கோயில்களில் ஒரு கால பூஜை செய்திட வேண்டும் என்ற நோக்கத்தில் திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000 வைப்பு நிதி ஏற்படுத்தி அதிலிருந்து கிடைக்கும் வட்டியிலிருந்து ஒரு கால பூஜை செய்திட வழி வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 406 திருக்கோயில்கள் பயன்பெற்றுள்ளன.
- ★ திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த 2,324 ஏக்கரும், 1,592 மனைகளும், 31 கட்டடங்களும் இவ்வரசு பொறுப்பேற்ற பின் மீட்கப்பட்டுள்ளது.
- ★ 733 திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்து குட முழுக்குச் செய்யப்பட்டுள்ளது.
- ★ திருக்கோயில் பணியாளர்களுக்கு 1.1.2006 முதல் 50 விழுக்காடு அகவிலைப்படியினைச் சம்பளத்துடன் சேர்த்து வழங்க ஆணையிடப்பட்டது. இதனால் 10,374 திருக்கோயில் பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

மாண்புமிகு
கைத்தறித்துறை அமைச்சர்
திரு. என் கே கே பி.ராஜா
அவர்கள்

கைத்தறி மற்றும் துணிநூல் துறை

* இத்துறை மூலம் ஏழை மக்களுக்கு 2006–07 ஆம் நிதியாண்டில் 158.91 இலட்சம் சேலைகளும், 162.21 இலட்சம் வேட்டிகளும் விநியோகம் செய்யப்பட்டன. இதன் மதிப்பு ரூ.256 கோடியாகும்.

* கைத்தறி நெசவாளர்களுக்கு இரு மாதத்திற்கு ஒருமுறை 100 யூனிட்டுகள் வரையிலும், விசைத்தறி நெசவாளர்களுக்கு இருமாதத்திற்கு ஒருமுறை 500 யூனிட்டுகள் வரையிலும் 1.8.2006 முதல் இலவச மின்சாரம் வழங்க ஆணையிடப் பட்டுள்ளது.

* ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு முடிய பயிலும் சுமார் 58.58 இலட்சம் மாணவ–மாணவியர்க்கு இலவச சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

* ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறைகளுக்குத் தேவையான 22.36 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு இந்தக் கல்வியாண்டில் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் உருவாக்கிய ஏழு உலக அதிசயங்களை உள்ளடக்கி 1,64,492 வண்ணங்களில் நெய்யப்பட்ட பட்டுச் சேலையை அறிமுகப்படுத்தி, அதற்கு "மயில் தோகை பட்டுச் சேலை" எனப் பெயர் சூட்டினார்கள். (22.11.06)

மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள், சென்னையில், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் நடத்திய "தேசிய கைத்தறிக் கண்காட்சி – 2007"ஐ தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்கள். (15.03.07)

தமிழைக் கட்டாய மொழிப் பாடமாக்கி புதிய சட்டம்

மாண்புமிகு
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
திரு. தங்கம் தென்னரசு
அவர்கள்

பள்ளிக்கல்வித் துறை

★ தமிழை ஒரு கட்டாயமொழிப் பாடமாக்கிட வகை செய்யும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

★ பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாளான ஜூலை 15 "கல்வி வளர்ச்சி நாளாக" அறிவிக்கப்பட்டுள்ளது.

★ அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் ஒப்பந்த முறையில் தொகுப்பூதியம் பெற்று பணியாற்றி வந்த 46,605 ஆசிரியர்களுக்கு 1.6.2006 முதல் காலமுறை ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

★ 24,642 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன.

★ ஒளிவுமறைவற்ற கலந்தாய்வுக் கூட்டம் மூலம் 30,000 ஆசிரியர்கள் இடமாறுதல் செய்யப்பட்டனர்.

★ 2006–07ஆம் ஆண்டில் 120 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 120 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

★ "அனைவருக்கும் கல்வி" திட்டத்தின் கீழ் ரூ.332 கோடி செலவில் 14,354 வகுப்பறைக் கட்டடங்களும் 1,075 பள்ளி தொகுப்பு வள மைய கட்டடங்களும், கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், சென்னையில் காமராசர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து நடைபெற்ற விழாவில் பள்ளிக் குழந்தைகளுக்குப் பரிசுகளை வழங்கினார்கள். (15.7.2006)

மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள், மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள் முன்னிலையில் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது வழங்கும் விழாவில் விருதுகளை வழங்கினார்கள். (5.9.2006)

மாண்புமிகு
வணிகவரித்துறை அமைச்சர்
திரு. எஸ்.என்.எம்.உபயதுல்லா
அவர்கள்

வணிகவரித் துறை

விலைவாசியைக் கட்டுப்படுத்த மதிப்புக் கூட்டுவரி நடைமுறை

★ 2006–2007ஆம் ஆண்டு மார்ச் முடிய ரூ.19,217.22 கோடி வரி வசூல் செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய ஆண்டை விட 17.33 விழுக்காடு அதிகமாகும்.

★ சமாதான் திட்டத்தின் கீழ் வணிகர்களிடமிருந்து மொத்தம் 1,035 மனுக்கள் பெறப்பட்டு, ரூ.695.29 இலட்சம் நிலுவை வரி வசூலிக்கப்பட்டது.

மதிப்புக் கூட்டு வரி

★ 22.7.2006 அன்று தாக்கல் செய்யப்பட்ட 2006–2007ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு 1.1.2007 முதல் மதிப்புக் கூட்டு வரி இம்மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

மீனவர் நலன்

★ 5,000 விசைப்படகுகளுக்கு (ஒரு விசைப்படகிற்கு மாதம் ஒன்றுக்கு 1,000 லிட்டர் டீசலுக்கு) விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டு வந்தது. இந்த அளவு 1,500 லிட்டர் என்ற அளவிற்கு உயர்த்தி 1.8.2006 முதல் வரி விலக்கு அளிக்கப்படும் என 22.7.2006 அன்று அறிவிக்கப்பட்டது.

தமிழில் பெயரிடப்பட்ட திரைப்படங்கள்

★ புதிய படங்களுக்குத் தமிழிலேயே பெயர் சூட்டப் படுமானால் அந்தப் படங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்கு அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பதிவுத்துறை

- பதிவுத்துறை, 2005-2006 ஆம் நிதியாண்டில் ரூ.2,349 கோடி வருவாய் ஈட்டியது. 2006-2007ஆம் ஆண்டில் மார்ச் திங்கள் முடிய ரூ.3,409 கோடி வருவாய் ஈட்டியுள்ளது. இது 2005-2006ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வருவாயுடன் ஒப்பிடுகையில் 45 விழுக்காடு வளர்ச்சியாக உள்ளது.

- கடந்த 2005-2006ஆம் ஆண்டில் 20,11,566 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டன. 2006-2007இல் 24,92,294 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டன. 2005-2006-ஆம் ஆண்டு ஆவணப்பதிவுடன் ஒப்பிடுகையில் இதன் வளர்ச்சி 24 விழுக்காடாகும்.

தமிழில் பெயரிடப்படும் திரைப்படங்களுக்குக் கேளிக்கை வரிவிலக்கு
மற்றும் பல்வேறு சலுகைகள் வழங்கியமைக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்குத்
தமிழ்த்திரையுலகினர் நன்றி தெரிவித்தனர். (23.9.2006)

பன்னாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றோருக்கு ரொக்கப் பரிசுகள்

மாண்புமிகு
சுற்றுச்சூழல்துறை அமைச்சர்
திரு. டி.பி.எம்.மைதீன்கான்
அவர்கள்

சுற்றுச்சூழல்
இளைஞர் நலன்
மற்றும்
விளையாட்டு
மேம்பாட்டுத்துறை

சுற்றுச்சூழல் துறை

- ★ சென்னை மாவட்ட, சுற்றுச் சூழல் பொறியாளர் கட்டடம் ரூ.168 இலட்சம் செலவிலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப் பாட்டு வாரிய வேலூர் மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அலுவலகம் ரூ.140 இலட்சம் செலவிலும், கட்டப்பட்டுப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.
- ★ சுற்றுச்சூழல் துறை ஏழு கடலோர மாவட்டங்களில் சுனாமி குடியிருப்பு மறுவாழ்வு பணிக்காக உயர் மட்ட அலைக்கோடு நிர்ணயிக்கும் பணியினைச் செய்துள்ளது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு

- ★ தேசிய அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிகளில் 71 மாணவ, மாணவியர்கள் பங்கேற்று 30 பேர் பதக்கம் வென்றனர்.
- ★ இந்திய விளையாட்டுக் குழுமத்தால் நடத்தப்பட்ட 2006–2007 ஆம் ஆண்டிற்கான முதலாவது தேசிய அளவிலான பள்ளிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில், (தடகளம், இறகுப் பந்து, கூடைப் பந்து, ஹாக்கி, கால்பந்து, மேசைப் பந்து, கையுந்துப் பந்து மற்றும் பளுதூக்குதல்) 170 பேர் கலந்து கொண்டு 99 பேர் தேசிய அளவிலான முதல் 3 இடங்களைப் பெற்றுள்ளனர்.
- ★ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் சென்னையில் நடத்தப்பட்ட தேசிய அளவிலான பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் அனைத்து மாநிலங்களைச் சார்ந்த 675 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டதில் தமிழக கூடைப்பந்து அணி முதல் இடத்தைப் பெற்றுள்ளது. மேலும் ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் நீச்சல் விளையாட்டில் அதிகமாகத் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றனர்.

★ தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற உயர்நிலை, மேல்நிலை மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் 83 பேருக்கு ரூ.5,32,000 ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

★ தமிழகத்திலுள்ள உதகமண்டலம் மாவட்டத்தைச் சார்ந்த கோத்தகிரி, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த செய்யார் மற்றும் கடலூர் மாவட்டத்தைச் சார்ந்த விருத்தாச்சலம் ஆகிய தாலுகாக்களில் சிறிய விளையாட்டு அரங்கம் அமைக்க ரூ.346 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதன் கட்டுமானப்பணிகள் தற்சமயம் முடியும் தருவாயில் உள்ளது. மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கோயம்புத்தூரில் நவீன வசதிகளுடன் கூடிய செயற்கை இழை புல்தரை தடகளம் / ஓடுபாதை மற்றும் தருமபுரி மாவட்டத்தில் முகப்பையார் என்ற இடத்தில் நவீன வசதியுடன் கூடிய உள் விளையாட்டு அரங்க கட்டுமானப்பணிகள் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

★ கத்தார் நாட்டில் தோகா நகரில் நடைபெற்ற 15–ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று, பதக்கங்கள் வென்று, சாதனை புரிந்த தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு 18.12.2006 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ரொக்கப் அவர்கள் பரிசுத் தொகையினை வழங்கினார்கள்.

1.	செல்வன். கே.சசிகிரன்	சதுரங்கம் – கலப்புக் குழு கிளாசிகல்	தங்கப் பதக்கம்	ரூ.20 இலட்சம்
2.	செல்வி. எஸ்.சாந்தி	தடகளம் – 800 மீ. ஓட்டம்	வெள்ளிப் பதக்கம்	ரூ.15 இலட்சம்
3.	திருமதி. அஞ்சு பீ.ஜார்ஜ்	தடகளம் – நீளம் தாண்டல்	வெள்ளிப் பதக்கம்	ரூ.15 இலட்சம்
4.	செல்வன். சௌரவ் கோஷல்	ஸ்குவாஷ் – ஒற்றையர்	வெண்கலப் பதக்கம்	ரூ.10 இலட்சம்

★ 2006–2007–ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழகம் சார்பாகக் கலந்துக் கொண்டு 43 தங்கப் பதக்கங்களையும், 49 வெள்ளிப் பதக்கங்களையும் 49 வெண்கலப் பதக்கங்களையும் வென்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய மாணவர் படை

★ சனவரி 2007 ஆம் ஆண்டு புதுதில்லியில் அகில இந்திய அளவில் இயக்ககங்களுக்கு இடையே நடைபெற்ற "குடியரசு தினவிழா பயிற்சி முகாம்" போட்டியில் தமிழ்நாட்டு மாணவர்கள் மூன்றாவது இடத்தைப் பெற்று கீழ்க்கண்ட பதக்கங்களை வென்றுள்ளனர்.

★

போட்டிகள் / நிகழ்ச்சிகள்	வென்ற பதக்கங்கள் / இடங்கள்
1) விமான மாதிரி வடிவமைப்புக் கட்டுப்பாடு வேகப் போட்டி	தங்கம்
2) திறந்தவெளி கப்பல் மாதிரி வடிவமைப்புப் போட்டி	தங்கம்
3) மாணவர்களுக்கான குதிரை சவாரிப் போட்டி	வெள்ளி
4) தனிசிறந்த முதுநிலை விமானப் பிரிவு மாணவர் போட்டி	வெள்ளி
5) தனிசிறந்த இளநிலை விமானப் பிரிவு மாணவியர் போட்டி	வெள்ளி
6) ஒழுக்கப்போட்டி	முதலிடம்
7) இயக்ககத்திற்கிடையேயான அலங்கார ஊர்திப் போட்டி	முதலிடம்
8) முதுநிலை மாணவர் கவாத்துப் போட்டி	இரண்டாம் இடம்
9) பிரதமரின் அணிவகுப்பு நடைப்போட்டி	இரண்டாம் இடம்
10) முதுநிலை மாணவியர் கவாத்துப் போட்டி	மூன்றாம் இடம்

மற்ற அகில இந்திய அளவிலான பயிற்சி முகாம் நிகழ்ச்சிகளில், நமது மாணவர்கள் வகித்த இடங்கள் பின்வருமாறு

1) தரைப்படை (டி.எஸ்.சி) மாணவர் போட்டி	முதலிடம்
2) விமானப்பயிற்சி (வி.எஸ்.சி)	முதலிடம்
3) அகில இந்திய அளவிலான வி.எஸ்.சி போட்டி	இரண்டாம் இடம்
4) டி.எஸ்.சி. மாணவியருக்கான போட்டி	மூன்றாம் இடம்
5) மிகச் சுறுசுறுப்பான கப்பற்படை அலகுகளிடையேயான மிதவைப் பயணப்போட்டி	மூன்றாம் இடம்

★ தேசிய மாணவர் படை மாணவி செல்வி எஸ்.மைதிலி "இந்தோரில்" நடைபெற்ற 50ஆவது தேசிய வீராங்கனைகளுக்கான துப்பாக்கிச் சுடும் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்
15ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற தமிழகத்தைச் சேர்ந்தோரைப்
பாராட்டி, ஊக்கத் தொகை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்கள். (18.12.2006)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களிடம்
கின்னஸ் சாதனைக்காக 29.4 கி.மீ. தூரம் ஓடிய மதுரை வில்லாபுரத்தைச் சேர்ந்த
சிறுமி எஸ்.எஸ்.சிவஸ்ரீ தனது பெற்றோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். (19.3.2007)

சுனாமி மறுசீரமைப்புப் பணியில் கடலோரத் தொடர் தடுப்புக் காடுகள் உருவாக்கம்

மாண்புமிகு
வனத்துறை அமைச்சர்
திரு. என்.செல்வராஜ்
அவர்கள்

வனத்துறை

- 45,250 எக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகளும், வனங்களை ஒட்டி அமைந்துள்ள 40 பழங்குடியினர் கிராமங்கள் உள்ளிட்ட 205 கிராமங்களில் கிராம மேம்பாட்டுப் பணிகளும் ரூ.101.42 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன.

- உலக வங்கியின் உதவியுடன், அவசர கால சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2,850 எக்டேர் பரப்பில் கடலோரத் தொடர் தடுப்புக் காடுகளும், 1,500 எக்டேர் பரப்பில் சதுப்பு நிலக்காடுகளும், ரூ.14.30 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.

- சமூக வனப் பணியாளர்கள் மற்றும் தோட்டக் காவலர்களுக்கான குறைந்த பட்ச தினசரி ஊதியம் 1.9.2006 முதல் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ரூ.85.05 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் 2,441 பணியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

- தமிழகம், மாவட்டத்திற்கொரு வனவிரிவாக்க மையத்தை உருவாக்கி, நாட்டிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.

- 12ஆவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி ரூ.13.275 கோடி செலவில், வனப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- நீலகிரியிலுள்ள முதுமலை வன உயிரினச் சரணாலயம் மற்றும் தேசியப் பூங்காவும், கோவை மாவட்டத்தில் உள்ள இந்திரா காந்தி வன உயிரினச் சரணாலயம் மற்றும் தேசியப் பூங்காவும், புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

✶ வனத்துறையின் பராமரிப்பில் உள்ள சாலைகளை மேம்படுத்தவும், செப்பனிடவும், ரூ.10.40 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

✶ தரம் குன்றிய வனப்பரப்பு மீட்டல், நீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல், மண்வளப் பாதுகாப்பு, சூரிய மின்வேலி அமைத்தல் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளைச் செய்து தருதல் போன்ற பணிகள் ரூ.209.23 இலட்சம் செலவில், 383 எக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டன.

✶ மனித – வன உயிரின மோதலைத் தவிர்க்க, வனங்களில் எல்லையோரம் 262.50 கி.மீ. தூரம் சூரிய மின்வேலி அமைப்பதற்காக ரூ.4.24 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும், வன உயிரினங்களால் ஏற்படும் சேதாரத்திற்கான இழப்பீடு வழங்க மொத்தம் ரூ.99.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் மாநில அரசால் அளிக்கப்பட்ட ரூ.50 இலட்சம் துறையின் வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவாக மிகவும் அதிகபட்சத் தொகையாகும்.

✶ தஞ்சாவூர் கோட்டத்தில் தேக்கு மரம் விற்பனை மூலம் ரூ.11.84 கோடி வருவாய் எட்டப்பட்டுள்ளது. இதேபோன்று துறையின் வசமிருந்த 52 மெ.டன் சந்தனக்கட்டைகள் விற்பனை செய்ததன் மூலம் ரூ.18.15 கோடி வருவாயை இத்துறை ஈட்டியுள்ளது.

✶ 8,044 எக்டேர் பரப்பில் குளக்கரைகளில் எழுப்பப்பட்ட கருவேல மரத்தோட்டங்கள் விற்பனை மூலம் அரசுக்கும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் ரூ.10.26கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

✶ தமிழக வனத்துறை, ஜெய்பூரில் நடைபெற்ற 15ஆவது அகில இந்திய வனத்துறைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று, 30 தங்கம், 30 வெள்ளி, 21 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று முதலிடத்தைப் பெற்று சாதனை புரிந்துள்ளது.

✶ நீலகிரி மாவட்டத்தில் 550 எக்டேர் பரப்பில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் வனத்துறையினரால் செயற்படுத்தப் படுகிறது. தீத்தடுப்பு, வேட்டை தடுப்பு முகாம்கள் மற்றும் மண் மற்றும் ஈரப்பதப் பாதுகாப்பு

ஆகியப் பணிகள் ரூ.237.40 இலட்சம் செலவில், பணிகள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

* தமிழக வனப்பகுதியில் வசிக்கும் ஆதி திராவிட இன மக்களின் நலன் பேண, மக்களுக்குச் சுத்தமான குடிநீர் வழங்கும் முகமாக 2006 – 2007ஆம் ஆண்டில் ரூ.30 இலட்சம் செலவில் அரூர், ஒசூர், வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை மற்றும் கோயம்புத்தூர் கோட்ட வனப்பகுதி ஆதிதிராவிட இன மக்களுக்கு மேல் நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர் குழாய் மூலம் நல்ல குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. ரூ.96.15 இலட்சம் செலவில் ஆதிதிராவிட இன மக்கள் வருவாய் ஈட்டிடும் பொருட்டு 735 யூனிட் செம்மறி ஆடுகளும் 200 பசுமாடுகளும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் திருவள்ளூர், வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, ஈரோடு, சத்தியமங்கலம், ஒசூர், கரூர், திருச்சிராப்பள்ளி, தேனி, சேலம், ஆத்தூர் கோட்ட வனப்பகுதிகளில் வசிக்கும் ஆதிதிராவிட இனமக்கள் பயன் பெற்றுள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் திருவண்ணாமலை மாவட்டம் சென்னாவரத்தில் 3ஆவது கட்ட இலவச நிலம் வழங்கும் திட்டத் தொடக்க விழாவின்போது மரக்கன்றுகளை நட்டார்கள். (17.3.2007)

மாண்புமிகு
நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்
திரு. வெள்ளக்கோயில்
மு. பெ.சாமிநாதன் அவர்கள்

புதிய சாலைகள் - பாலங்கள்

- 2006–2007 ஆம் நிதியாண்டில் 8,620 கி.மீ சாலைப் பணிகளும், 69 பாலப் பணிகளும் ரூ.1,021.58 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டன.
- நெடுஞ்சாலைத்துறை ஆராய்ச்சி நிலைய ஆய்வுக்காக நவீன கருவிகள் ரூ.18.20 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டன.

நெடுஞ்சாலைத்துறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் திருச்சிராப்பள்ளியில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தைத் திறந்து வைத்தார்கள். (11.11.2006)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் முன்னிலையில் தமிழக அரசிற்கும் குட் எர்த் மேரி டைம் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே கடலூர் அருகே கப்பல் கட்டும் தளம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. (15.2.2007)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் முன்னிலையில் ரூ.10 ஆயிரம் கோடி மதிப்பில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமையவுள்ள வணிக நோக்கிலான மின்நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்வதற்காகத் திருக்குவளை அருகே துறைமுகம் அமைத்திட தமிழக அரசின் கடல்சார் வாரியத்திற்கும் அயர்லாந்து நாட்டின் மெக்னமாரா இன்டர்நேஷனல் நிறுவனத்திற்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. (21.03.2007)

மாண்புமிகு
சமூக நலத்துறை அமைச்சர்
டாக்டர் (திருமதி) பூங்கோதை
அவர்கள்

சமூக நலத் துறை

ஏழைப் பெண்கள் பயன்பெற திருமண உதவித்தொகை உயர்வு

★ குழந்தை மையங்கள் மற்றும் சத்துணவு மையங்களில் வாரம் இரு முட்டை வழங்கப்பட்டு வருகிறது.

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் – உதவித் தொகை ரூ.10,000–லிருந்து ரூ.15,000 ஆக உயர்த்தப் பட்டது. இதனால் 45,999 ஏழைப் பெண்கள் பயனடைந்துள்ளனர்.

★ முதியோர், உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவையர், கணவனால் கைவிடப்பட்டோர், வேளாண் தொழிலாளர்கள் ஆகியோரின் முதியோர் ஓய்வூதியத் தொகை ரூ.200–லிருந்து ரூ.400ஆக உயர்த்தப்பட்டது. இதுவரை இதனால் ஏறத்தாழ 12.52 இலட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

★ ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் ஆகியவை சிறப்பாக செயல்படும் வகையில் 29,773 மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

★ டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவி திட்டப் பயனாளிகளின் வயது உச்சவரம்பு 30–லிருந்து 35 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ்,
பயனாளிகளுக்கு காசோலையினை வழங்கினார்கள். (3.6.2006)

பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தொடங்கிவைத்த
சத்துணவுடன் வாரம் இரண்டு முட்டைகள் வழங்கும் திட்டம். (15.7.2006)

மாண்புமிகு
கால்நடை
பராமரிப்புத்துறை அமைச்சர்
திருமதி. பி.கீதா ஜீவன்
அவர்கள்

கால்நடைகளைப் பாதுகாக்க காப்பீட்டுத் திட்டம்

★ 11 கால்நடை மருந்தகங்கள், 30 கிளை நிலையங்கள் மற்றும் செல்லப் பிராணிகள் மருந்தகம் ஒன்றும் புதிதாகத் தொடங்கப் பட்டுள்ளன. இங்கு செல்லப் பிராணிகளுக்கு வசூலித்து வந்த நுழைவுக்கட்டணம் மற்றும் தின சிகிச்சைக் கட்டணம் 9.1.2007 முதல் நீக்கம் செய்யப்படுகிறது.

★ கரூர், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம் மற்றும் விருதுநகரில் ரூ.67 இலட்சம் செலவில் புதிய கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

★ கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தில் 37.44 இலட்சம் கால்நடைகள் பயன்பெறும் 2,695 முகாம்கள் நடத்தப்பட்டன. இதுவரை 189.73 இலட்சம் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளது.

★ கால்நடை காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 2006–07 ஆம் ஆண்டில் 80,608 கால்நடைகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.

★ பன்னாட்டு அளவில் கல்வி மற்றும் ஆராய்ச்சித் தொடர்பாக அமெரிக்காவின் மெக்சிகன் ஸ்டேட் பல்கலைக்கழகத்துடன் ஓர் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

★ உணவு பதனிடும் தொழில்நுட்பவியல் இளங்கலைப் படிப்பு (பி.டெக்) புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

★ சுயமாகப் பணியாற்றும் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளைக் கொண்டு (Self Employed Veterinary Graduate) புதிய செயற்கை முறை கருவூட்டல் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

★ திரவ நைட்ரஜன் விநியோகம் மற்றும் இருப்பு சீராகவும், தங்கு தடையின்றியும் வழங்க ஏதுவாக 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட திரவ நைட்ரஜன் சேமிப்புக் கழகங்கள் சேலம், கோவை, தருமபுரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை, சென்னை, திருவண்ணாமலை மற்றும் வேலூர் ஆகிய 10 இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

★ மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை நிதி உதவியுடன் "உயிர் பானம், உயிர் பூச்சிக் கொல்லி, உயிர் உரம் போன்றவற்றைத் தயாரிக்கும் தொழில்நுட்பங்களை பிரபலப்படுத்துதல்" என்னும் புதிய திட்டம் ரூ.11.33 இலட்சத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத்துறை

மாண்புமிகு
ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்
திருமதி. ஆ.தமிழரசி
அவர்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

ஆதிதிராவிட மாணவ-மாணவியர் 10ஆம் வகுப்பு வரை கல்வி பெற சிறப்புக் கட்டணம் நீக்கம்

★ ஐந்து அரசு ஆதி திராவிடர் நல நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக ரூ.132.27 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

★ ஐந்து அரசு ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக ரூ.177.19 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

★ 100 விழுக்காடு பள்ளிச் சேர்க்கையை உறுதி செய்ய 60,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பெண் குழந்தைகளுக்கு ரூ.3 கோடி உதவித் தொகை.

★ பள்ளிக் கல்வியை மாணவியர் தொடர ஊக்கம் அளிக்கும் வகையில் 30,000 மாணவியருக்கு ரூ.3 கோடி உதவித் தொகை.

★ 10ஆம் வகுப்பு வரை படிப்பிற்கான சிறப்புக் கட்டணம் நீக்கம். இதனால் 10,73,199 மாணவ மாணவியர் பயனடைந்துள்ளனர்.

★ 10ஆம் வகுப்புக்கு மேற்பட்ட படிப்பிற்கான மாநிலச் சிறப்பு உதவித் தொகையாக 73,373 மாணவ மாணவியருக்கு ரூ.396.69 இலட்சம் வழங்கப்பட்டது.

★ 136 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு ரூ.149.97 இலட்சம் செலவில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

★ 11,945 ஆதிதிராவிட மக்களுக்கு ரூ.522.50 இலட்சம் மதிப்புள்ள வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன.

பழங்குடியினர் நலத்துறை

1) பழங்குடியினர் உண்டி உறைவிட நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக ரூ.49.46 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ)

1) மகளிர் நிலம் வழங்கும் திட்டத்தில் 1,361 ஆதி திராவிட பழங்குடியின மகளிருக்கு ரூ.10.86 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

2) சுயதொழில் தொடங்க தனி நபர் கடன் திட்டத்தின் கீழ் 11,263 நபர்களுக்கு ரூ.28.01 கோடி நிதி உதவி வழங்கப்பட்டது.

3) 1,70,036 சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.25.49 கோடி பொருளாதாரக் கடன் வழங்கப்பட்டது.

4) 11,982 வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு ரூ.22.56 கோடி செலவில் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி வழங்கப்பட்டது.

சிறப்பு மாநில நிதி உதவித் திட்டம்

1) ஆதிதிராவிட மாணவ மாணவிகள் நவீன வேலை வாய்ப்புகள் பெற ரூ.10 கோடி செலவில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

2) 6,000 ஆதிதிராவிட இளைஞர்களுக்குச் சுயதொழில் தொடங்கிட ரூ.7 கோடி மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது.

3) 11,691 துப்புரவுப் பணியாளர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் ரூ.58.4 கோடி மதிப்பீட்டில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பாடப்பிரிவில் சாதனை படைத்த ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவ–மாணவியருக்கு ரொக்கப்பரிசுகள் வழங்கினார் (3.7.2006)

மாண்புமிகு
மீன்வளத்துறை
அமைச்சர்
திரு. கே.பி.பி.சாமி
அவர்கள்

மீனவர்களுக்கு டீசல் மீதான விற்பனை வரி விலக்கு

- ★ மீன் பிடிக்க வழங்கப்படும் உயர்ரக டீசல் மீதான விற்பனை வரி செலுத்துவதிலிருந்து 100 விழுக்காடு விலக்களித்து டீசல் ஒரு லிட்டருக்குத் தோராயமாக ரூ.6.74 குறைக்கப்பட்டுள்ளது.

- ★ 1.8.2006 முதல் ஒரு மீன்பிடி விசைப்படகிற்கு விற்பனை வரி விலக்களிப்பட்ட டீசல், மாதம் 1,500 லிட்டர் வீதமும் ஆண்டுக்கு 15,000 லிட்டர் வீதமும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

- ★ தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் 1,79,853 மீனவப் பயனாளிகளுக்கு ரூ.20,20,11,050 நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

- ★ மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் 1,02,993 மீனவ மகளிர்க்கு ரூ.12,20,19,350 நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

மீன்வளத்துறை

மாண்புமிகு
பால்வளத்துறை
அமைச்சர்
திரு. உ.மதிவாணன்
அவர்கள்

பால்வளத்துறை

பால்வளத்துறை

★ 2006–2007ஆம் ஆண்டில் மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்கள் சராசரியாக கொள்முதல் செய்த பாலின் அளவு 22.10 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது.

★ பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.1.50 உயர்த்தி வழங்கப்பட்டது.

★ கடந்த ஆண்டை விடக் கூடுதலாக இவ்வாண்டு நாளொன்றுக்கு ரூ.1.93 இலட்சம் லிட்டர் பால் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

★ பசு மற்றும் எருமைகளைக் காப்பீடு செய்யத் தேவையான தொகையில், 50 சதவிகிதம் அரசு மானியமாக வழங்கப் படுகின்றன. இத்திட்டத்திற்காக, ரூ.688 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2006 – 07 ஆம் ஆண்டில் 80,608 கால்நடைகள் காப்பீடு செய்யப்பட்டுள்ளன.

★ 2005–06ஆம் ஆண்டில் மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்கள், நாளொன்றுக்குச் சராசரியாக கொள்முதல் செய்த பால், 21.59 இலட்சம் லிட்டரிலிருந்து 2006–2007 ஆம் ஆண்டு மார்ச் வரை 22.10 இலட்சம் லிட்டராக உயர்ந்தது.

★ 307 புதிய சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. அவற்றில் 110 சங்கங்கள் பெண்களால் நிருவகிக்கப்படுபவை.

★ ஆவின் வரலாற்றில் முதன் முறையாக 26.6.2006 அன்று அதிகபட்சமாக 25.37 இலட்சம் லிட்டர் பால், ஒன்றியங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

- சங்கங்களில் தரமான பாலை உற்பத்தி செய்ய மொத்த பால் குளிர்விப்பான்கள், நிறுவப்பட்டு வருகின்றன. இதுவரை 22 பால் குளிர்விப்பான்கள் நிறுவப்பட்டுள்ளன.

- காஞ்சிபுரம் – திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், தருமபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, நீலகிரி மற்றும் மதுரை ஒன்றியங்களில் ரூ.1,224.21 இலட்சம் செலவில் “தரமான தூய பால் உற்பத்தி” என்ற திட்டத்தைச் செயல்படுத்த மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

ஆவின் பணியாளர் நலன்

- ஆண் பணியாளர்களுக்குத் தையற்கூலி ரூ.300லிருந்து ரூ.400 ஆகவும், பெண் பணியாளர்களின் தையற்கூலி ரூ.60லிருந்து ரூ.90 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- சலவைப்படி ரூ.25 லிருந்து ரூ.50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- இரவுப்பணிப் படி ரூ.5லிருந்து ரூ.10 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

- வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட பணியாளர்களுக்கு 5 சதவிகிதத் தனி ஊதியத்துடன் ஊதிய மறு நிருணயம் செய்து வழங்கப்பட்டுள்ளது.

- காஞ்சிபுரம் – திருவள்ளூர் ஒன்றியத்தைச் சேர்ந்த கால்நடை தீவன தொழிற்சாலையில் பணிபுரிந்த 131 தொழிலாளர்கள் இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

- மருத்துவமனைகளில் உள்நோயாளிக்கான சிகிச்சைப் பெறுவதற்கும் இணையம் மற்றும் ஒன்றியங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அவரைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கும் மருத்துவச் செலவு மீட்புத் தொகையைத் திரும்ப அளிக்கும் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

- விற்பனைப் பிரிவில் பணிபுரியும் களப்பணியாளர்களுக்கு மழைகோட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு
கதர்வாரியத்துறை அமைச்சர்
திரு.கா.இராமச்சந்திரன்
அவர்கள்

கதர்த்துறை

* மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பணி நீக்கம் செய்யப்பட்ட தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியப் பணியாளர்களின் பிற்காலத்தை கருணையுடன் கருத்தில் கொண்டு உயர் நீதிமன்றத் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யாமல் 97 பணியாளர்களுக்கும் பணி நியமன ஆணை வழங்கினார்.

* கூட்டுறவு அங்காடிகள் மூலமும், கூட்டுறவு நியாயவிலைக் கடைகளின் மூலமும் விற்பனை செய்யப்பட்டு வரும் கதர் வாரியப் பொருட்களின் விற்பனை குறைந்து வருவதைத் தொடர்ந்து விற்பனையினை அதிகரிக்க அனைத்து மண்டல இணைப் பதிவாளர்களும் நிருணயிக்கப்பட்ட குறியீட்டின்படி அந்தந்த முதல் வாரத்தில் தேவைப்பட்டியல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு அனுப்பிட வேண்டும் என அரசுக் கூட்டுறவுத் துறையின் மூலம் ஆணை பிறப்பித்துள்ளது.

* 2006–2007ஆம் ஆண்டில் பல்வேறு அரசு துறைகளில் இருந்து ரூ.635 இலட்சம் மதிப்பிற்குத் தளவாடப் பொருட்கள் தயாரித்து வழங்கிட ஆணை பெறப்பட்டு அதனில் இதுவரை ரூ.157 இலட்சம் மதிப்பிற்குத் தளவாடப் பொருட்கள் தயாரித்து விநியோகம் செய்யப் பட்டுள்ளது.

* நெசவாளர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த ஊதியத்தில் 25 சதவிகிதம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும் நூற்பாளர்களுக்குச் சிட்டத்திற்கு வழங்கப்பட்ட நூற்புக் கூலித் தொகையும் ரூ.2 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

* கதராணையகத்தின் பாரம்பரியத் தொழில்களின் மறுவாழ்வு நலத் திட்ட நிதியின்கீழ் கோவை மாவட்டத்திலுள்ள சூலூர் காதி தொகுப்பினைச் செயல்படுத்திட தமிழக அரசு பகுதி–2 திட்டத்தின் கீழ் 2006–2007ஆம் ஆண்டில் ரூ.35 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 510 குடும்பங்கள் பயனடைவார்கள். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.180 இலட்சமாகும்.

* திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள அம்பத்தூர் தோல் தொகுப்பினைச் செயல்படுத்திட தமிழக அரசு பகுதி–2 திட்டத்தின் கீழ் 2006–2007ஆம் ஆண்டில் ரூ.3 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தினால் 500 கைவினைஞர்கள் பயனடைவார்கள். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.17 இலட்சமாகும்.

தமிழரசு

சந்தாதாரர் ஆகுங்கள்

தமிழரசு சந்தா விவரம்

தமிழக அரசின் செய்தி - மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் வெளியிடப்படும் தமிழரசு இதழில் அரசு நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முக்கிய உரைத் தொகுப்புகள், அரசின் முக்கிய ஆணைகள், கதை, கவிதை, கட்டுரைகள் என ஏராளமான செய்திகள் வெளியிடப்படுகின்றன.

தமிழரசு (தமிழ்) மாத இதழ்

தனி இதழ்	:	ரூ.10/-
ஆண்டுச் சந்தா	:	ரூ.120/-
ஆயுள் சந்தா	:	ரூ.1,000 (10 ஆண்டுகள்)

தமிழரசு (ஆங்கிலம்) காலாண்டு இதழ்

தனி இதழ்	:	ரூ.15/-
ஆண்டுச் சந்தா	:	ரூ.60/-
ஆயுள் சந்தா	:	ரூ.500 (10 ஆண்டுகள்)

தமிழரசு சந்தா தொகையினை
வங்கி வரைவோலையாகவோ,
பணவிடை மூலமாகவோ,
துணை இயக்குநர் (வெளியீடுகள்)
தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
சென்னை - 600 002.

என்ற முகவரிக்கு தங்களின் பெயர், கதவு எண், தெருப் பெயர், ஊர், மாவட்டம் மற்றும் அஞ்சல் குறியீட்டு எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்பி தமிழரசு இதழைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்க்க, படிக்க, பயன்பெற

இன்றே தமிழரசு சந்தாதாரர் ஆகுங்கள்

செ.ம.தொ.இ/602/வரைகலை/2007